Registered No. M. 120.

ओं.

# JNÂNA BODHINI

*A TAMIL MAGAZINE AND REVIEW*

DEVOTED MAINLY TO

LITERATURE, SCIENCE, PHILOSOPHY & RELIGION

EDITORS:

M. S. PURNALINGAM PILLAI, B.A.

V. G. SURYANARAYANA SASTRI, B.A.

Vol. V. No. 8.—March 1902.

CONTENTS.


| | | PAGE. |
|---|---|---|
| Tamil Literature | Editors | 281 |
| Râmâyana Sâram | C. Muthiah Mudaliar | 284 |
| The Blind Bard-Viraraghava Mudaliar. | K. Kuppuswami Mudaliar B.A. | 293 |
| A Pessimist turned an Optimist. | C. D. Venkata Varada Chariar | 299 |
| Vikramorvasîyam | P. M. Srinivasa Chariar | 307 |
| The Culture of the Intellect | S. K. Sundara Charlu | 312 |
| The Statement of Droupathi | Achalambikai Amma | 315 |
| REVIEWS OF BOOKS | | 317 |
| EDITORIAL NOTES | | 320 |


Madras:

THOMPSON AND CO.,

33, POPHAM'S BROADWAY.

1902.

# JNANA BODHINI

**Terms of Subscription.**

Annual Subscription including postage Rs.... 2 8 0

N.B.—The year begins with August, and subscriptions are not accepted for broken periods. New subscribers joining in the course of the year, will as far as possible be supplied with the back numbers of the current volume.

## TO ADVERTISERS.

The Jnana Bodhini affords the best and cheapest medium for advertising. It reaches all classes of people and commands the largest monthly circulation. Rate per page per insertion Rs. 5. Apply to Messrs. Thompson & Co., Publishers, Broadway, Madras.

*All literary contributions and books for Review and business letters, &c., should be addressed to T. A. Swaminatha Aiyar, Manager, The "Jnana Bodhini" Office, Black Town, Madras. All remittances should be made payable to Messrs. Thompson & Co., Publishers of "Jnana Bodhini," Broadway, Madras.*

## அறிக்கை.

**காரியஸ்தர்கள் தேவை.**

"ஞானபோதினி"ப் பத்திரிகையைப் பலவிடங்களில் பரவச்செய்து சந்தாதார்கள் சேகரித்து அனுப்பக்கூடிய காரியஸ்தர்களுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும். விவரந் தெரியவேண்டுவோர் "ஞானபோதினி" மானேஜருக்கு எழுதிக்கொள்க.

கோயமுத்தூர் இலாகாவுக்கு மகா-ள-ள-ஸ்ரீ சோமசுந்தர முதலியாரவர்களைக் காரியஸ்தராக ஏற்படுத்தியிருக்கிறோம்.

(மானேஜர்.)

## புதிய நூல்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. ரூபாவதி ... | 1 | 0 | 0 |
| 2. கலாவதி ... | 1 | 8 | 0 |
| ஷை கலிகோ ... | 1 | 12 | 0 |
| 3. சரசாங்கி ... | 1 | 0 | 0 |
| 4. சுகுணசுகேசர் ... | 0 | 8 | 0 |
| ஷை கலிகோ ... | 1 | 0 | 0 |
| 5. தசரதன் தவறு ... | 0 | 4 | 0 |
| ஷை கலிகோ ... | 0 | 8 | 0 |
| 6. உஷா பரிணயம் ... | 0 | 8 | 0 |
| 7. நாடக வியல் ... | 0 | 8 | 0 |
| 8. தனிப்பாசுரத்தொகை | 0 | 4 | 0 |
| ஷை கலிகோ ... | 0 | 8 | 0 |
| ஷை ஆங்கில மொழி பெயர்ப்புடன் ... | 1 | 0 | 0 |
| 9. பாவலர் விருந்து (முதல் நாள்) ... | 0 | 8 | 0 |
| ஷை கலிகோ ... | 1 | 0 | 0 |
| 10. தாமரை நாண்மலர் .. | 0 | 6 | 0 |
| ஷை கலிகோ ... | 0 | 12 | 0 |
| 11. வித்தியாரண்ய நகரம். | 0 | 8 | 0 |
| 12. நன்றியறியா மகன் .. | 0 | 8 | 0 |
| 13. பாரத ஸாரம் (முதற் பாகம் ... | 0 | 10 | 0 |
| ஷை கலிகோ ... | 1 | 0 | 0 |
| 14. வர்ண வைத்திய சாஸ்திரம் ... | 0 | 8 | 0 |
| 15. மச்சபுராணம் (செய்யுள்) கலிகோ ... | 2 | 8 | 0 |
| 16. திருமுல்லைவாயிற்புராணம் (கலிகோ) ... | 0 | 10 | 0 |
| ஷை (மார்பில்) ... | 0 | 8 | 0 |
| 17. செய்யுட்கோவை (கலிகோ) ... | 0 | 13 | 0 |
| ஷை மார்பில் ... | 0 | 10 | 0 |
| 18. விவேக விளக்கம் ... | 0 | 4 | 0 |
| 19. வாசகத்திரட்டு ... | 0 | 10 | 0 |
| 20. நகைப்பைத்தியம் (முதற்பாகம்) ... | 0 | 8 | 0 |
| ஷை (இரண்டாம்பாகம்) | 0 | 8 | 0 |
| 21. ஸ்ரீராமாநுஜ சரிதம். | 0 | 8 | 0 |
| 22. ஔவைகுறள் மூலம். | 0 | 2 | 0 |

இந்நூல்களெல்லாம் சென்னை **ஆரியன் புக் டெபோவிலும், தாம்ஸன் கம்பெனியாரிடத்திலும்,** அகப்படும்.

# ஞானபோதினி

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் V. 1902 வரு மார்ச்சு மீ 20 உ. புத்தகம் 8.

### விஷயங்கள்.


தமிழ்ப்புலவர் சரிதம்.—பத்திராதிபர் ... 281
இராமாயண ஸாரம்.—செய்யூர் - முத்தைய முதலியார் ... 284
அந்தகக்கவி வீரராகவ முதலியார்.—கல்குளம் - குப்புசாமி முதலியார்... 293
வெறுத்தவன் விரும்பினன்.—க. தே. வேங்கட வரதாசாரியன்... 299
விக்கிரமோர்வசீயம்.—பு. மா. ஸ்ரீநிவாஸாசாரியர் ... 307
உள்ளப்பபிற்சி.—ச. கி. சுந்தராசாரியன் ... 312
பாஞ்சாலி கூற்று.— அசலாம்பிகையம்மை ... 315
புத்தகக் குறிப்புக்கள்.— ... 317
பத்திராதிபர் குறிப்புக்கள்.— ... 320



பத்திராதிபர் :— எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ.
வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.



தாம்ஸன் கம்பெனியார்
பதிப்பிப்பது.

1902.

வருஷசந்தா ரூ. 2—8—0 சஞ்சிகை ரூ. 0—4—0

# ஞானபோதினி.

சம்புடம் V. } 1902ஹ மார்ச்சுமீ 20உ { புத்தகம் 8


## TAMIL LITERATURE.

## தமிழ்ப்புலவர் சரிதம்.

உலகின்கணுள்ள நாகரிக நாடுகளில் வழங்கும் பாஷைகளெல்லாம் நன்னிலையிலிருக்கின்றன. அவ்வந்நாடுகளின் நாகரிக விருத்திக்கேற்றவாறு ஆங்காங்குப் பயிலுறாஉம் பாஷைகளும் விருத்தியடைந்து ஒளி சிறந்து விளங்குகின்றன. அவ்வப் பாஷைகளின் மகிமையும் சிறப்பும் அவ்வப்பாஷைகள் வல்ல புலவர்களானும் அன்னாரியற்றிய நூற்றொகைகளானும் புலனாம். ஆகவே ஒவ்வொரு பாஷையின் சிறப்பையும் விளக்குங் கருவிகளுள் தலை நின்றது அப்பாஷையின் புலவர்சரித மென்பது துணியப்படும். படவே ஒவ்வொரு பாஷைக்கும் புலவர் சரிதம் வகுக்கப்படுதல் இன்றியமையாததொன்றாம் எனவே புலவர்சரித மில்லாமை பாஷைக்கேயொரு குறைவாக மதிக்கப்படுதன்மட்டில் நில்லாமல் அப்பாஷை பயின்றோர்க்கும் பயில்வோர்க்கும் உற்றதோர் பெருங் குறையாகவும் மதிக்கப்படுகின்றது.

இத்தகைய குறைபாடு நமது தமிழ்மொழிக்கண்ணு முண்டுகொல்? இது விஷயமாக ஆராய்ச்சி செய்தவழித் தோன்றுவனயாவை? ஒராற்றல் உற்று நோக்குமிடத்து இக்குறைபாடு முன்னொரு காலத்திருந்து பின்னர்ச் சிறிது சிறிதாக நீங்கத் தலைப்பட்டு வாராநின்றது. சில நூற்றாண்டுகட்கு முன்னர் எழுதப்பட்டதாகத் தோன்றுகின்ற 'தமிழ் நாவலர் சரிதை' என்றதோர் நூலுளது. அந்

நூல் தமிழ் நாவலர்களுட் சிலருடைய சரித்திரங்களைக் கூறுமுகத்தால் அவ்வந்நாவலர்கள் பற்பல வமயங்களிற் பாடிய செய்யுட்களையும் இடையே யெடுத்துரைக்கின்றது. அஃது ஒருவாறு உய்த்தறியுமிடத்துத் தற்காலத்து வெளிப்பட்டுலவும் 'தனிப்பாடற்றிரட்டு' என்னும் நூலையும் போலாகின்றது. இன்னின்ன பாடல்கள் இன்னின்ன சந்தர்ப்பங்களிற் பாடப்பெற்றன வென்பது குறிப்பிக்கப் பட்டிருத்தலின், தனிப்பாடற்றிரட்டினுந் தமிழ் நாவலர் சரிதைமே தக்கதென்பது தேற்றம். தனிப்பாடற்றிரட்டு இத்தமிழ் நாவலர் சரிதையினுதவிகொண்டே தொகுக்கப்பட்டு மிருக்கலாமென்பது தோன்றுகின்றது.

இது நிற்க. யாழ்ப்பாணத்திற் காசிசெட்டி யென்பாரொருவர் தமிழ்ப் புலவர் சரிதத்தைத் தொகுத்து ஆங்கில மொழியிலெழுதிப் பல்லாண்டுகட்கு முன்னர் வெளியிட்டனர். அது நூலாராய்ச்சி முறையைத் தழுவி ஒருவாறு எழுதப்பட்டுளது; அது காலக்கிரமப்படி யெழுதப்படாமை காலவரையறை காண்டலரிதாகின்றமை பற்றியே போலும். அதன்கண் நல்லிசைப் புலவர் பலருடைய சரிதங் காணப் படாமையாற் குன்றக்கூறலென்னுங் குற்றந் தங்குவதாயிற்று. அதன் பின்னர் யாழ்ப்பாணத்து ஆ. சதாசிவம் பிள்ளை யென்பார் 'பாவலர் சரித்திரதீபகம்' என்றதோர் நூலியற்றிப் பிரசுரித்தனர். அது தமிழ்ப் புலவர் பெயர்களை அகராதிக் கிரமப்படுத்தி யெழுதியதோர் தமிழ் வசனநூலாம்; இடையிடையே அவ்வப் புலவருடைய பாடல்களும் உதாரணமாகக் காட்டப்பட்டுள. கால நிர்ணய விஷயத்தில் இந்நூல் அதிக திருப்திகரமாதனதா யிருக்கவில்லை. இதன்கட் சில அருமையான விஷயங்களுங் கூறப்படாமற்போயின.

இனிக் கும்பகோணக் கலாசாலையில் தமிழ்ப்புலமை நடாத்தி வரும் மகா வித்துவான் பிரமஸ்ரீ உ. வே. சுவாமிநாதையரவர்கள் தாம் பதிப்பித்த சிலப்பதிகாரத்தினும் மணிமேகலையினும் தமிழ் நூல்கள் பலவற்றைப் பற்றிய குறிப்புக்க ளெழுதியிருக்கின்றனர். இன்னும் புறநானூற்றினும் நல்லிசைப்புலவர் பலருடைய சரித்திரக் குறிப்புக்களும் அப்புலவர்களை யாதரித்தாரைப் பற்றிய குறிப்புக்களும் வரையப்பட்டுள. இவையனைத்தையும் ஒருங்கு தொகுத்து இன்னுந் தாம் அருமையாகக்கண்டுகுறித்துவைத்துள விஷயங்களையுங்கூட்டித்

தனிநூலாக வெளிப்படுத்தப் போகின்றனரெனக் கேள்வியுற்றுக் கழி பேருவகைப் பூக்கின்றும். இம்முயற்சி கைகூடுமாறு நம் ஐயரவர் கட்கு இறைவன் திருவருள் புரிவாராக.

இடையிற் பாறைக்கிணறு வெட்டப்புகுந்து முகவையம்பதி முதலிய விடங்களிற் பெரும்புகழ் படைத்தவரும், திருவாமாத்தூரி லிருந்து காலங்கழித்தவருமாகிய 'திருப்புகழ்ச் சுவாமிகள்' என்ற முருகதாச சாமியார் இயற்றிய 'புலவர் புராணம்' என்றதோர் நூல் வெளிப்போந்துளது. [அது கனம்பொருந்திய திவான்பகதூர்-வ. கிரு ஷ்ணமாசாரியரவர்களாற் பதிப்பிக்கப்படுகின்றது. முதற்பாகம் வெளி யாயிற்று. பின்னிரண்டு பாகங்களும் விரைவில் வெளிவரும் என்று நம்புகின்றேம். இதன் முதற்பாகத்திற் சில பகுதிகள் நமது சர்வ கலாசாலையின் பிரதமகலா பரீக்ஷைக்கும், கலா வித்தியார்த்திப் பட் டப் பரீக்ஷைக்கும், கலாநாயகப் பட்டப் பரீக்ஷைக்கும், பாடமா யேற்படுத்தப்பட்டுள.] இந்நூல் முழுதுஞ் செய்யுளா னியன்றுளது. சாமானியமாகப் புலவர் வீடுகளிற் கதையாகச் சொல்லிக்கொள்ளும் விஷயங்க ளெல்லாம் ஒருவாறு தொகுத்து இந்நூலின்கட் கூறப் பட்டுள. காலவரையறை, நூலாராய்ச்சி முதலியன இந்நூலின்கட் கண்டிலேம். இதனை யொரு காப்பியமாகக் கருதி ஆராய்தல் ஈண்டு எடுத்த விஷயமன்று. தமிழ்ப்புலவர் சரிதமாகுமட்டில் இஃது ஓராற் றூற் பயன்படுவதாகும்.

இதுகாறும் தமிழ்ப்புலவர் சரித விஷயமாக வெளிப்பட்ட நூல் களைப்பற்றி யுரைத்தாம். இனிச் சிற்சில நூல்களைப் பதிப்பித்த பதிப் பாசிரியர்கள் அவ்வந் நூலின் பதிப்புரைக்கண் நூலாசிரியர் வரலாறு களும் தாங்கள் ஆராய்ச்சிசெய்தமட்டிற் கூறியிருக்கின்றனர். சிலர் இக் காலத்தில் வெளிப்படும் தமிழ்ப் பத்திரிகைகளில் விஷயங்களாகத் தமிழ்ப் புலவர் சிலரைப்பற்றி யெழுதியிருக்கின்றனர். இதற்கிடை யிற் சில்லாண்டுகட்கு முன்னர் அஷ்டாவதானி - வீராசாமி செட்டியார் என்பார் 'விநோத ரசமஞ்சரி' என்பதோர் நூலியற்றியிருக்கின்றனர். அஃது அதன்பெயர்ப் பொருளின்படி விநோதார்த்தமாக எழுதப் பட்டதோர் கதைத் தொகுதியெனக் கொள்ளற்பாலதேயன்றித் தமி ழ்ப்புலவர்களைப் பற்றியதோர் மெய்ச்சரிதமாகக் கொள்ளப்படுவ தன்று.

எனவே குறைபாடுகளனைத்தும் நீங்கி, யாவரும் ஏற்று மேற்கொள்ளத்தக்கதாய் தமிழ்ப்புலவராவா ரனைவரையும் பற்றி ஒருங்கே கூறுவதாய் அன்னாரியற்றிய நூல்களின் ஆராய்ச்சிகளுமுடையதாய்க் காலவரையறையும் தெளிவுபெற நியாய வாயிலாற் காட்டுவதாய் ஒரு தமிழ்நூல் இதுகாறும் வெளிப்பட்டிலது. அத்தகைய தொன்று என்று வெளிப்படுமோ? அறியோம். இந்த விஷயத்தைக்குறித்து நம்முடைய மதுரைப் புதுத் தமிழ்ச் சங்கத்தின் அதிகாரிகள் நன்கு கவனித்து நடப்பாராக.

பத்திராதிபர்.

---

## RAMAYANA SARAM.

## இராமாயண ஸாரம். *

---

[260-ஆம் பக்கத்தொடர்ச்சி.]

யாதேனுமொரு விஷயத்தைச்செய்யப் புகுமுன்னர், அதனை எவ்வாறு செய்து முடிக்கவேண்டுமென்பதைப்பற்றி ஒவ்வொருவரும் தமது மனத்துள் நன்காராயவேண்டியது அவசியமன்றே? ஆகவே, வான்மீகியாரும் ஸ்ரீராம சரிதத்தைச் சுலோகங்களான் இயற்றுவதற்கு முந்தி அச்சரிதத்தில் நிகழ்ந்த ஒவ்வொரு செயலினைப்பற்றியும் ஆழ்ந்த கருத்துடன் ஆராயத் தொடங்கித் தமது அகக்கண்களைத் திறந்து அவையனைத்தையும் உற்று நோக்கினர். அங்ஙனஞ்செய்யவே, ஸ்ரீராமர், இலக்ஷ்மணர், சீதை முதலியவர்கள் அவரவர் நிஜவுருவத்தோடு எதிர்நின்று தத்தம் நிலைமைக்குரிய செயல்களைப் புரிவது போல் வான்மீகியாருடைய ஞானதிருஷ்டிக்குத் தோற்றியது. இவ்வாறாக ஸ்ரீராமபிரானுடைய சரித்திரம் முழுவதையும் பிரத்தியட்சத்திற் பார்ப்பதைப் போலவே, வான்மீகியார் தமது ஞானக்கண்ணினாற் கண்டுகொண்டார். ஒவ்வோர் அம்சத்திலும் உண்மையானதோர் உயிருள்ள சித்திரம் போலும் சரித்திரம் தமக்கு முன்னே விரிந்து தோன்றுமாற்றைக் கவனித்துவந்தார். யாவற்றையுஞ் சுற்றியிருப்பதும், யாவற்றினூடும் புகுந்திருப்பதுமாகிய சூக்குமஆகாயத்தின்கண் உலகின்கண் நிகழும் ஒவ்வொரு செயலும் அழியாததோர் குறியீடு செய்வதாயிருக்கின்றது. அங்ஙனம் குறியீடு செய்யாத காரியமொன்றும் என்றும் நிகழ்வதில்லை. ஆதலானன்றே வான்மீகியார் ஸ்ரீராமசரிதமனைத்தையும் உய்த்துணர்வா ராயினர்.

---

* Adapted from Mrs. Annie Besant's SHRI RAMA CHANDRA, The Ideal King.

நாம் நம்முடைய அறிவை விருத்தி செய்வதற்கு இரண்டுவிதமான வழிகள் உள. மற்றவர்கள் நமக்குக் கூறுவதைக் கேட்டும், அவர்கள் எழுதி வைத்துள்ள நூல்களைப் படித்தும் விஷயங்களை யறிந்துகொள்வது ஒரு வழியாகும். மற்றொரு வழியாவது, இயற்கையிலேயே நமக்குண்டாயிருக்கும் சிற்றறிவைக் கொண்டு ஒவ்வொரு விஷயத்தையும் பற்றித் தீர்க்காலோசனை செய்து நாமே அதன் திட்பநுட்பங்களைச் சிந்தித்துத் தெளிந்துகொள்வது. இவ்விரு வழிகளுள்ளும், பின்னர்க் கூறப்பட்டதே மிகவும் கடினமானது; ஆயினும், அதுவே மிகவுஞ் சிறப்புடைத்து. முதலிற் கூறிய அறிவையடைந்த பின்புதான், இரண்டாவது சொல்லப்பட்ட அறிவை நாம் பெறுதல் கூடும். நம்மிலும் அறிவில் உயர்ந்தவர்கள் சொல்வது யாதோவென்பதை நாம் முதலில் தெரிந்துகொள்ளல் வேண்டும்; அதை நன்றாய்த் தெரிந்துகொண்ட பின்பு, அதைப்பற்றி நாமே தனியாய் ஆழ்ந்த கருத்துடன் ஊன்றிப்பார்த்து அதன் உள்ளுறை பொருள்களைப் பிறருதவி யின்றி நாமே உய்த்துணர்ந்து கொள்ளல்வேண்டும்.

வான்மீகியார் செய்ததும் இவ்வாறேயாம். முதலிற் கதையைத் தெரிந்து கொண்டார். அதன்பின்னர் அதைப்பற்றி நன்றாயோசித்து, அதை இன்னவித சுலோகங்களினால் அமைக்கவேண்டுமென்பதையும், அவற்றை இன்னவாறு வகுக்கவேண்டு மென்பதையும் முன்னதாகத் தம் மனத்துக்குள்ளே வரையறுத்துக் கொண்டு, பின்பு சுலோகங்கள் இயற்ற ஆரம்பித்து, ஸ்ரீராம சரிதம் முழுவதையும் இருபத்து நாலாயிரம் சுலோகங்களினாற் பூர்த்திசெய்தார். இந்தச் சுலோகங்கள் யாவும் ஐந்நூறு அத்தியாயங்களாகவும், ஏழு காண்டங்களாகவுந் தொகுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு இயற்றப்பட்ட சுலோகங்களைப் பலர்க்கும் பயன்படுமாறு பரவச் செய்வதற்கு அக்காலத்திற் போதிய மார்க்கங்கள் கிடையா. புத்தகங்களுஞ் சுவடிகளும் அக்காலத்திற்குப் பின்தோன்றியனவேயாம். பாஷைகளெல்லாம் அப்போது ஒலிவடிவிலேயே இருந்தன; வரிவடிவிலிருந்த பாஷை ஒன்றேனுங் கிடையாது. ஆகவே, வான்மீகியார் தாமியற்றிய சுலோகங்களைச் சிறப்புடன் பாடத்தக்க சிறார் யாவரென்று யோசித்துக்கொண்டிருக்கையில், இளஞ் சந்நியாசிகள் இருவர் வந்து அவர் இணையடிகளில் விழுந்து வணங்கினார்கள். அவர்களில் ஒருவருடைய பெயர் குசன்; மற்றவருடைய பெயர் லவன். அவர்களிருவரும் ஸ்ரீராமபிரான் புத்திரர்கள்; ஆனால், அவர்களுக்குத் தாம் இன்னாருடைய புத்திரரென்று அப்போது தெரியாது. அதற்குக் காரணம் நாம் பின்னால் அறிந்து கொள்வோம். அந்தப் பால்ய சந்நியாசிக ளிருவரும் இனிய குரல் படைத்தவர்களாயும், சங்கீத சாஸ்திரத்தில் வல்லவர்களாயு மிருந்தபடியால், வான்மீகியார் தாமியற்றிய சுலோகங்களனைத்தையும் அவர்களுக்குப் போதித்து, அவைகளை முனிவர் குழாங்களிலும், பிராமண கோஷ்டிகளிலும், சான்றோரவைக்களங்களிலும் பாடும்படி

ஆஞ்ஞாபித்தனுப்பினர். அங்ஙனம் ஆஞ்ஞாபிக்கப்பட்ட அவ்விளைஞர்களிருவரும் அந்தச் சுலோகங்களை அநேக விடங்களில் பாடிவிட்டுப் பின்பொருநாள் அயோத்திமா நகரத்து வீதிவழியாகச் சென்றார்கள். அயோத்திமாநகரமானது, அக்காலத்தில் மகா வைபவத்தோடு ஸ்ரீராம சந்திரனால் அரசாளப்பட்டு வந்தது. வீதிவழியாகச் சென்ற இச்சிறுவர்களை அரசன் பார்த்தான்; அகமகிழ்ந்தான். அச்சிறுவர்களின் பேரழகும், உருவத்தின் தோற்றமும் ஸ்ரீராம சந்திரனுடைய கண்ணையும் மனத்தையும் ஒருங்கே கவர்ந்தன. உடனே அவர்களை வரவழைத்துத் தன்னுடைய இராஜசபையின் முன்பாகப் பாடுமாறு மன்னனும் வேண்டினன்; மைந்தரும் இணங்கினர்கள். ஸ்ரீராம பிரானின் பிறப்பு வரலாற்றையும், அவருக்கு நேர்ந்த துன்பங்களையும், துக்கங்களையும், சீதா பிராட்டியாருக்குநேர்ந்த பேராபத்துக்களையும், இலக்ஷ்மணருடைய இலக்ஷணங்களையும், பரதருடைய விரதமகிமையையும் ஏனைய வெல்லா விஷயங்களையும் அந்தந்தக் கதா புருஷர்களின் முன்னிலையிலேயே கடல்மடை விண்டாற்போலக் கீதமாரியைப் பொழிந்தார்கள். ஆங்கிருந்தா ரனைவரும் இந்த விந்தையான சரித்திரத்தைக்கேட்டு ஆச்சரியமும் ஆனந்தமு மடைந்து மெய்ம்மறந்து பரவசமானார்கள். அச்சிறுவர்களிருவரும் பார்வைக்குப் பரமனடியாரைப் போல வேடம் பூண்டிருந்த போதிலும், அவர்களிடம் பொலிவுடன் விளங்கிய இராஜ சம்பீரத் தோற்றத்தால், அச்சபையிலிருந்தா ரனைவரும் அவ்விளைஞர் முனிவரோ அல்லது மன்னரோவென மயங்கினர்கள்.

இந்தச் சிறுவர்கள் மூலமாய் வெளிவந்த ஸ்ரீராமபிரானுடைய சரித்திரத்தை நாம் கேட்பதற்கு முன்னம், இச்சரிதம் உண்டான காலத்தின் நிலைமையைப் பற்றியும், ஸ்ரீராமபிரான் வந்தவதரிக்க நேர்ந்த காரணங்களைப் பற்றியும் இங்கே சற்றுக் கவனிப்போம்.

இவ்வுலகத்தின் கால வரையறையானது **கிருத்திய (கிருத)** யுகமென்றும், **திரேதாயுக**மென்றும், **துவாபரயுக**மென்றும், **கலியுக**மென்றும் நான்கு யுகங்களாக (அதாவது பெரும் பிரிவுகளாக) வகுக்கப்பட்டுள்ளன. ஸ்ரீராமர் அவதரித்திருந்தது திரேதாயுகத்தின் அந்திய காலமாகும். அவர் இவ்வுலகத்தினின்றும் மறைந்த பிறகு துவாபரயுகம் ஆரம்பித்தது. அந்த யுகத்தின் அந்தியத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் தோன்றினர்; அவர் இறந்ததும் கலியுகம் பிறந்தது.

ஸ்ரீராமபிரானை உண்மையில் யாவரென்று நாம் ஊன்றிப் பார்க்கில், அவர் சாமானியராகக் காணப்படவில்லை. அவரை யுத்தத்தில் வல்ல ஒரு வீரனென்றாவது, அல்லது பராக்கிரமத்திற் சிலாக்கியம் பெற்ற ஒரு மன்னவன் என்றாவது சாமானியமாகக் கருதுவதும் அறிவீனமாகும். அவரோ, சாமானியாதீதர்; அவர் தெய்வத்தன்மை வாய்ந்த அவதாரபுருஷர். அங்ஙனமாயின், உலகத்துள்ள மாந்தரெல்லோரும் தேவதாம்சரல்லரோ? ஆம்;

தேவதாம்சர்தாம்; ஒவ்வொருவருடைய ஹிருதயத்திலும் பரமாத்மாவானது பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றது; அந்தப் பரமாத்மாதான் ஒவ்வொருவரையும் நற்பதவிக்குப் பிடர் பிடித்துந்துகின்றது; அதற்கு எவரொருவர் ஈடுபட்டு உடன் செல்கின்றாரோ, அவரே பாக்கியங்கள் பலவற்றுள்ளும் மேலான பாக்கியத்தைப் பெற்ற புனிதராகின்றார். ஆனால், அவதாரமென்பதோ, இதனினும் ஆழ்ந்த கருத்துடைத்து. ஸ்ரீராமபிரான் அவதார புருஷர் என்று நாம் சொல்லும்போது, **அவதாரம்** * என்னும் பதமானது, விண்ணுலகினின்றும் மண்ணுலகத்திற்குக் கடவுளே மானிட உருவத்தோடு போந்தனர் என்னும் பொருள் பயப்பதா யிருக்கின்றது. அந்த அவதார காலத்தில் அவர் தெய்வத்தன்மை நிறைந்தவராயிருக்கின்றார். அப்போது அவரிடம் விளங்குந் தெய்வத்தன்மை மாந்தரிடத்தில் விளங்குவதைப் போலன்று. சிற்றறிவும் சிறுதொழிலும் சின்னாளும் பல்பிணியுமுள்ள மாந்தராம் மக்களிடத்து விளங்குந் தெய்வத்தன்மை அணுவிலும் அணுவாகவுள்ளது; அவதார புருஷராம் அவரிடத்து விளங்குந் தெய்வத்தன்மையோ, பரிபூரணமாயுள்ளது.

இவ்வாறு அவதாரங்கள் தோன்றுவதற்குப் பல காரணங்கள் உள. உலகத்திலே நன்மைசெய்வோர்களுக் குதவிபுரிந்து அவர்கள் வலிமையைப் பெருக்கவும், தீமை செய்வோர்களையழித்து அவர்கள் வலிமையைக் குறைக்கவும் கடவுள் அவதார புருஷராய்த் தோன்றுகின்றாரென்பது ஒரு முக்கிய காரணமாகும். இதுவே எல்லா அவதாரங்களுக்கும் பொதுவான காரணமென்று சொல்லலாம்:

"சாவாது பிறவாது தனிமுதலா யிருந்தநா
னுவாவிவ் வுலகுபடு மிடர்துயர்தீர்ப் பதற்காக
மேவாது நின்றேயென் மாயையினான் மெய்யேபோ
லோவாது பிறந்திடுவே னுகந்தோறு முகந்தோறும்."

"ஏ பாரதா! தருமம் அழியும் போதும், அதருமம் அதிகரிக்கும்போதும், யானே நேரில் வருகின்றேன். நல்லவர்களைக் காத்துத் தீயவர்களையழித்துத் தருமத்தை நிலைநாட்டுவதற்காக நான் யுகத்துக்கு யுகம் பிறந்துகொண்டிருக்கின்றேன்" † என்று பகவற்கீதையிலேயே சொல்லப்பட்டிருக்கின்றது.

அவதார புருஷர் துஷ்ட நிக்கிரகஞ் செய்யும் விஷயமாக ஓர் ஆசங்கை உண்டாகின்றது. உலக முறையானது ஒன்றற்கொன்று மறுதலைப்பட்ட சக்திகளால் இயலுகின்றது. ஈசுவரனால் உயிர்ப்பிக்கப்பட்ட அகவாழ்க்கையின்

---

* அவ—கீழே, த்ரு—குதித்தல்

† பகவற்கீதை I-V-7-8.

வன்மைக ளனைத்தையும் இவ்வுலகமானது வெளிப்படுத்துகின்றது. பூமியி லிடப்பட்ட தோர் விதையானது முளைத்துச் செடியாகித் தளிர்த்துப் பூத்துக் காய்த்துத் திவ்யமான கனிகளையுந் தருகின்றதன்றோ ? அவ்வாறே இவ்வுலக மும். பரமாத்மா வென்கிற விதையானது மாயையிலே இடப்பட்டு, உலகமாக உற்பவித்து, மக்களையே மலர்களாகக் கொண்டு, வளர்ச்சியுறு நிற்கின்றது. அம்மலரினின்றுமே தெய்வீக மென்னும் தீங்கனி தோன்றுகின்றது. ஏனெ னில் நாமுங் கடவுளரே ; ஆனற் கடவுளாகும் நெறியிலுள்ளோம்.

இந்தப் பிரபஞ்சம் இயங்குவதற்கு இரண்டு வித சக்திகள் இன்றியமை யாதவைகளாயிருக்கின்றன. இந்த இரண்டு சக்திகளும் ஒன்றுக் கொன்று மாறுபட்டிருப்பது போலக் காணப்படுகின்றன. ஒரு சக்தியானது பிரபஞ்ச விருத்திக்கு அனுசரணையா யிருக்கின்றது ; இந்தச் சக்தியைத்தான் பிரபஞ்ச விருத்திக்கு உதவி செய்வதாக நாம் நினைக்கின்றோம். மற்றொரு சக்தியோ பிரபஞ்ச விருத்திக்கு எதிர்முகமாய் நின்று வேலை செய்கின்றது ; இந்த சக்தியை அதற்கு இடையூறு செய்வதாக நாம் நினைக்கின்றோம். ஆனல் அவற்றின் உண்மை இஃதன்று. வெளித் தோற்றத்தால் நாம் வேறுபட நினைக்கலாயினோம். ஏனெனில், பிரபஞ்ச விருத்தியானது நடை பெற வேண்டு மானல், அதற்கு அனுசரணையாகத் தோற்றிய சக்தி எவ்வளவு அவசியமோ அது போலவே அதற்கு எதிர் முகமாய் நின்ற சக்தியும் அவ சியமா யிருக்கின்றது. இதற்கு உதாரணமாக ஒரு துவிசக்கர வண்டி யை * யெடுத்துக்கொள்வோம் ; இந்த வண்டியைப் பூமியின்மீது படாமல் உயரத்திலேதூக்கிப் பிடித்துக்கொண்டு, அதன் சக்கிரங்களைச் சுற்றினல், அந் தச் சக்கிரங்கள் ஒரே யிடத்தில் கிறுகிறு வென்று சுற்றுமே யொழிய, அந்த வண்டியானது சற்றேனும் இடம் விட்டுப் பெயருமோ ? அந்த வண்டி இடம் விட்டுப் பெயர வேண்டுமானல், அதற்கு ஒருவிதமான தடை வேண்டும். அதற்காக அதைப்பூமியின் பேரில் நன்ருய்ப் படியவைத்துப் பின்பு அதன் சக்கிரங்களைச் சுற்றுவோமானல், அப்போது அந்த வண்டி அதிவேகமாய்ச் செல்லும். இவ்விதமான இயல்பை நாம் ஒவ்வொரு விஷயத்திலுங் காணலாகும். ஒரு விஷயம் அபிவிருத்தி யடையவேண்டுமானல், அந்த விஷயத்துக்கு இடையூருக விருக்கவேண்டியதும் ஆவசியகம். நாம் மேலே குதித்தெழும்ப வேண்டுமானல், நம்முடைய முழுப்பலத்தையுந் தாங்கி நிற்க ஒருவிதத் தடை வேண்டியதாயிருக்கின்றது. அதற்குத் தரை உதவிசெய்கின் றது. இந்தத் தரையின்மீது உதைத்தெழும்பினல்தான் நாம் மேலே கிளம்புதல் கூடும். இப்படி நம்மை மேல்நோக்கிச் செலுத்துவதற்கு எதி ராய் நின்று உதவிசெய்யுந் தடைகளையே ‘தீமை’ அல்லது ‘கெடுதி’ யென்று உலகத்தில் மாந்தர் கூறுவார்கள்; ஆனல், இந்தத் தீமைகள்தாம் நமக்கு அளவிறந்த நன்மைகளைச் செய்கின்றன வென்பதை நாம் ஒவ்வொருவரும்

* Bicycle.

நன்ருய்த் தெரிந்துகொள்ளல் வேண்டும்; அந்தத் தீமைகளுக்கு நாம் இணங்கிக் கீழ்ப்படிந்து விடாமல், அவற்றை எதிர்த்து மேல்நோக்கிச் செல்வோமாகில், நமக்கு நன்மை உண்டாகுமென்பது நிச்சயம். தீமைகளுக்கு இணங்கி விடுவோமாளுல், நமக்கு நன்மை ஒருநாளும் உண்டாகமாட்டாது. மேலே எழவேண்டுமோளுல், பூமியின்மீது குப்புறக் கவிழ்ந்து படுத்துக்கொள்வதனுல் யாது பயன்? தேகத்திற் பலம் அபிவிருத்தியடைய வேண்டுமோனுல், அதற்கு முழுச்சோம்பேறியாய் மூலேயிற் படுத்துறங்கினுல் எவ்வளவேனும் பலம் வருமோ? பந்து விளையாடியும், பளுவான வஸ்துக்களைத் தூக்கியெறிந்தும், அவயவங்களைப் பயிற்சிசெய்து, அவைகளுக்கு வேலையிட்டு வந்ததலன்ருே, அந்த அவயவங்கள் மேன்மேலும் பல முடையனவாகிப் பின்னும் பளுவான வஸ்துக்களையும் எளிதில் தூக்கியெறியத்தக்க பேராற்றலைப் பெறுவனவாகும்? அதுபோலவே, நமக்கு நேரும் தீமைகளை அவ்வக்காலத்திலேயே எதிர்த்துச் செல்ல நாம் முயலுவோமாளுல், அத்தீமைகளை வெல்லத்தக்க வல்லமையை, அத்தீமைகளே நமக்குக் கொடுக்கும்; அங்ஙனமன்றி, நமக்கு நேருந் தீமைகளுக்கு நாம் இணங்கிவிடுவோமாளுல், அவைகளே முன்னின்று நம்மை நாசஞ்செய்யும். ஆகையால், நம்முடைய வாழ்நாட்களில் துன்பங்கள் சம்பவிக்கும்போது அவைகளைக் கண்டு அஞ்சி நடுங்கி அதைரியப்பட்டு நில்லாமல், அறிவென்னுந் துணைவனைக் கொண்டு, மிதித்து மேற்செல்வோமாளுல், முடிவிற் பெறற்கரிய நன்மைகளையும் பெறுதல் கூடும். நம்முடைய விருத்திக்கு நன்மை யெப்படிக் கடவுளாற் கொடுக்கப்பட்டிருக்கின்றதோ, அதுபோலவே, தீமையும் அவராலேயே கொடுக்கப்பட்டிருக்கின்றது. இவ்வுண்மையை,

* "ஒன்ருகி மூலத் துருவம் பலவாகி
யுணர்வு முயிரும் பிறிதாகி யூழி
சென்ரு சறுங்காலத் தங்கிலேய தாகித்
திறத்துலகந் தாளுகிச் செஞ்செவே நின்ற
நன்ருய ஞானத் தனிக்கொழுந்தே யெங்க
ணவைதீர்க்கு நாயகமே நல்வினையே நோக்கி
நின்ருரைக் காத்தி யயற்பேரைக் காய்தி
**நிலேயில்லாத் தீவினையு நீதந்த தன்றே"**

என்னும்ஆன்ருேர் வாக்கிலும் அறியலாகும். நன்மை தீமை யென்னுமிரண்டும நம்முடைய விருத்தியையே நாடுகின்றன; ஆளுல், இரண்டும் ஒரேவிதத்தில்லாமல் வெவ்வேறு விதத்தில் நாடுகின்றன.

இதனை யறியாது ஜனங்கள் தீமைகளுக்கு இணங்கி விடுவார்களாளுல், உலகமெங்கும் தீமைமிகுந்து பிரபஞ்ச விருத்திக்கே அபாயம் நேரிடும்போ

* கம்பராமாயணம்.

விருக்கின்றது. அப்போது கடவுள் உலகில் அவதாரமாய்த் தோன்றி நன்மை தீமைகளைச் சமநிலைப்படுத்துகின்றார். இத்தகைய சமயங்களில் தீமைகளுக் கெல்லாம் உறைவிடமாய் ஒருவன் காணப்படுகின்றான்; அவனே அவதார புருஷருக்குச் சத்துருவென முற்பட்டு நிற்கின்றான். இவ்வாறு இராமாய ணத்திற் காணப்பட்டவன் இராவணன்; தீமைகளெல்லாந் திரண்டுருண்டு வளர்ந்த மலை போன்றவன். நன்மைகளெல்லாம் ஒருருவென விளங்கியவர் ஸ்ரீராமசந்திரர். இங்ஙனம், நன்மைக்கு ஸ்ரீராமபிரானும் தீமைக்கு இராவ ணனும் பிரதிநிதிகளாய் நின்று அமர்புரிய, ஸ்ரீராமபிரானே வெற்றிபெற்றார். நன்மையுந் தீமையு மெதிர்நின்றால் நன்மைதானே ஜயமடையும்? நெருப்பை யவிக்கச் சருகாலாகுமோ? மெய்யைப் பொய்வெல்லுமோ? குணத்தைக் குற்றங் கொல்லுமோ? இன்பத்தைத் துன்பம் அழிக்குமோ? சித்தை ஜடம் ஜெயிக்குமோ? இரவியை இருள் மூடுமோ? அறத்தை வெல்ல யாராலா கும்? ஆகவே, இராவணன் தோல்வியடைந்தான்; ஸ்ரீராமபிரானாற் கொலை யுண்டான். ஆனால், கொலையுண்ட பிறகு அவனுக்கு வைகுண்ட பதவி கிடை த்தது. இராவணனோ, தீமைகளுக்குப் பிரதிநிதியா யிருந்து கெடுதிகளையே செய்துவந்தவன். அங்ஙனமிருந்தும், அவனுக்கு அவ்வித பதவிகிடைத்தத னால், தீமைக்கும் மூலாதாரமாயுள்ளவர் ஈசுவரர்தாமென்பது கரதலா மலகம் போல் விளங்குகின்ற தன்றோ?

அவதார முண்டாவதற்கு மேலேகூறிய காரணமன்றி வேறு சில காரணங்களு முண்டு. அவதார புருஷர் சில சமயங்களிற் குருவாய்வந்து உபதேசஞ் செய்கின்றார். கிருஷ்ணாவதார மெடுத்துப் பகவற்கீதை உப தேசித்தருளியதை யாவரே அறியாதார்? சில சமயங்களில் உலகினர்க்குத் திருஷ்டாந்தமாய்க் காட்டும் பொருட்டு அவதாரந் தோன்றுதலுண்டு. இவ் வாறு திருஷ்டாந்தமாய் விளங்குவது முற்றத் துறந்த முனிவர்களுக்கும் சந்நியாசிகளுக்கு மன்று. இல்லறம் பூண்டொழுகும் புருஷனும் மனை வியும், மக்களும், சகோதரரும் இன்னவாறு ஒழுகவேண்டு மென்பதை யும், அரசர்க்குங் குடிகளுக்கு முள்ள ஒற்றுமை யின்ன தென்பதையும் தாமே தம்முடைய அவதாரகாலத்தில் நடந்து காட்டி விளக்குகின்றார். இவற்றிற் கெல்லாம் ஒப்பற்ற திருஷ்டாந்தமாய் விளங்கியதுதான் ஸ்ரீராமாவதாரம். உத்தம புருஷருடைய இலக்ஷணங்களை நாம் தெரிந்துகொள்ள வேண்டுமா னால், இல்வாழ்க்கையிலுள்ள சகல தருமங்களையும் வெள்ளிடை மலைபோல் விளக்கிக்காட்டிய ஸ்ரீராமபிரானினும் மேலான ஒருவரை நாம் எந்த நூலிலுங் காண்டலரிது.

ஸ்ரீராமாவதாரத்தின் முக்கியமான கருத்து க்ஷத்திரிய தருமத்தை நன் றாய் விளக்கிக்காட்டவேண்டுமென்பதேயாம். ஏனெனில், க்ஷத்திரியரெல் லோரும் தங்கள் புஜபலபராக்கிரமத்தையும், அரசாளும் ஆற்றலையும் துன்

மார்க்கத்திற் பிரயோகிக்கத் துணிந்துவிட்டார்கள். நாடெங்கும் கொடுங்கோன்மை மிக்கது. ஒவ்வொரு க்ஷத்திரியனுக்கும், மற்றவனைக் காப்பதற்குப் பிரதியாக, அவனை வதைப்பதே தொழிலாய் முடிந்தது. யாவரும் சுயநலப் பிரியராயினர்கள். இதுவோ க்ஷத்திரிய தருமம்? இதற்கோ இறைவன் அவர்களுக்கு அளவிறந்த பலத்தைக் கொடுத்தருளினன்? பலவான் கடமை எளியானைக் காத்து இரக்ஷிப்பதன்றோ? அவனைக்கொன்று பக்ஷிப்பதன்றே? இதுபோலவே, பலத்தில் மிக்க இளைஞனெவனும், தன்னைப்பார்க்கிலும் பலத்திலும் வயதிலுங் குறைந்த சிறுவர்களை ஒருநாளும் அடித்து வருத்துதல் கூடாது. அவர்களை அன்புடனும் பக்ஷமுடனும் பாராட்டல்வேண்டும். அல்லாத பக்ஷத்தில், நெறிதப்பி யொழுகிய சிறுவன் பற்பல துன்பங்களாற் பரிபவப்படநேரும்.

* "எளியவரை வலியர் வாட்டின் வலியவரை யிருநீர் வைப்பி
னளியறத் தெய்வம் வாட்டும்"

என்ற மூதுரையும் மேற்கூறிய விஷயத்தை வலியுறுத்துவ தன்றோ?

க்ஷத்திரியர்கள் தங்கள் பலத்தைத் துன்மார்க்க வழியிற் செலுத்தினர்களன்றே? இதற்குத் தண்டனையாகப் **பரசுராமர்** க்ஷத்திரிய வம்ச முழுவதையும் அழித்து நாசமாக்கினர். அவர்களில் ஒவ்வொருவரையும் தம்முடைய கோடரியாற் குத்தி வதைத்துத் துன்மார்க்கத்திற் பலத்தைச் செலுத்தும் பிறருக்கும் அதே கதி கிடைக்குமென்பதை அவர்களுக்கு விளங்கக் காட்டினர். அந்த நீதி பரசுராமராற் போதிக்கப்பட்ட பிற்பாடு, உத்தமமான க்ஷத்திரியன் இன்னவாறொழுக வேண்டுமென்பதற்குத் திருஷ்டாந்தமாக ஸ்ரீராமபிரான் அவதாரஞ் செய்தார்.

இவர் கொண்டிருந்த குணங்களெல்லாம் க்ஷத்திரியருக்கு மிகவும் அவசியமானவைகளாகும். அவ்வித குணங்களெல்லாம் இப்போது இந்தியாவில் முன்னிருந்த வாசனையுமின்றி அழிந்துபட்டுக் கிடப்பதை என்னென்று சொல்லலாம்? ஒரு ஜாதியார் முன்னுக்கு வரவேண்டுமானல், அவர்களிடம் வீரத்தன்மை, அளவிறந்த பலம், துன்பங்களைச் சகித்திருக்கும் வல்லமை, கௌரவத்தின்மீது ஆசை, துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்யுந் திறமை, முதலிய நற்குண நற்செய்கைகள் நன்றாயமைந்திருத்தல் வேண்டும். இவைகளை யெல்லாம் பூர்வீக இந்தியாவிலிருந்த வீரர்கள் மிகுதியாகப் பெற்றிருந்தார்கள்; அதனல்தான் அப்போது இந்தியாவும் மிகப்பொலிவுடன் விளங்கிக்கொண்டிருந்தது. இப்போதுள்ள வீரர்களோ, அவைகளை அலக்ஷியம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்; ஆகவே, இந்தியாவின் சிறப்பும் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்துபட ஆரம்பித்துவிட்டது. எந்த ஜாதியார் மேற்கூறிய குணங்களைக் கைசோர விடுகின்றார்களோ, அந்த ஜாதி

* காஞ்சிப்புராணம்.

யார் மேன்மை யடைவார்களென்று கனவிலுங் கருதுவதற்கு இடமில்லை. ஆகையால், அந்த உத்தமகுணங்களை இன்னமுங் கைசோரவிடாது, அவற்றை மீண்டுங் கைக்கொள்ள நாம் ஒவ்வொருவரும் முயலுவோமாக.

வீரத்தன்மையும் பலமும் யார் ஒருங்கே பெற்றிருக்கின்றார்களோ, அவர்களிடம் கெட்ட எண்ணமும் அகங்காரமும் உடன்தோன்றி விடுவது வழக்கம். ஆனால், ஸ்ரீராமசந்திர னிடத்தில் இத்தகைய துர்க்குணங்கள் எள்ளளவேனும் இருந்தது கிடையாது. அயலாரிடத்து அன்பும், ஐங்குரவரிடத்து மரியாதையும், வயதிலும் அறிவிலும் உயர்ந்தோரிடத்து வணக்கமும், ஸ்ரீராமபிரானிடம் ஆபரணங்களாய் விளங்கின. இவ்வாறே நம்மிந்தியாவிலுள்ள சிறுவர்கள் எவ்வளவுதான் வீரத்தன்மையும் தைரியமும் பெற்றபோதிலும், கொஞ்சமாவது இறுமாப்படைதலே கூடாது ; இவர்களுக்குப் பெரியோரிடம் வணக்கமும் பக்தியும் இருந்தால் மட்டில் இவர்களுடைய வீரத்தன்மைக்குச் சிறப்புண்டு.

இங்ஙனங் கூறியதனால் வயதில் முதிர்ந்தவர்களையும் உன்னத பதவியிலிருப்பவர்களையும் பார்த்துச் சிறுவர்கள் மனநடுக்கமும் அச்சமுங் கொள்ள வேண்டுமென்று எண்ணவேண்டுவதில்லை. மைந்தன் நன்னடையிலிருந்தால், தந்தை கண்டு சிந்தை களிப்பானல்லனோ? சிஷ்யன் உத்தம வழியிற் சென்றால், ஆசிரியன் பார்த்து அகமகிழ்வானல்லனோ? சிறியவர்கள் கூரிய புத்தியும் நேரிய நடையுமுடையவர்களா யிருந்தால், அவர்களைக்காணும் பெரியவர்கள் அவர்கள் புத்திசாலித் தனத்துக்காக வியந்து புகழ்வார்களே யொழிய அவர்களை இகழார்கள். அதுபோலவே, ஒருவன் வீரத்தன்மையும், மனோதைரியமும், பேராற்றலும் பெற்றிருந்தால், அவனைக்காணும் மற்றவர்கள் அவனுடைய பெருமைவாய்ந்த குணங்களைக்கண்டு மெய்ச்சிக் கொள்வார்களே யொழிய, அவன் தம்மிடம் வணங்கா முடியனாயிருக்கின்றானே யென்று அவனை ஒருநாளும் இழித்துக்கூறார்கள். ஏனெனில், கற்றாரன்றே கற்றாரைக் காதலிப்பார் ?

* "நற்றாமரைக் கயத்தி னல்லன்னஞ் சேர்ந்தாற்போற்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்."

† "கற்றோ னருமைகற்றோ .னேயறியும் வந்திமகப்
பெற்றோ ளருமையறி யாள்."

அவ்வாறே, வீரர்தாம் வீரனையும் விரும்புவார் . வீரர்களின் உத்தம குணமும் இதுவேயாம்.

சேய்யூர் - முத்தைய முதலியார்.

---

* மூதுரை † பாலபோதம்

# THE BLIND BARD-VI'RARA'GHAVA MUDALIYAR.

## அந்தகக்கவி வீரராகவ முதலியார். *

அந்தகக்கவி வீரராகவ முதலியாரென்பவர், † செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள பொன்விளைந்த களத்தூர் (பொற் களந்தை) க்கருகிலுள்ள **பூதூரிலிருந்த வடுகநாத முதலியார்**க்குப் புத்திரரா யுதித்தனர். இவர் பூர்வ கன்மத்தின்பலனாற் பிறவிக்குருடராயிருந்தும் கல்வியில் ஆதிசேடனையும் அகத்தியனையும் போன்று பிரசித்தி பெற்றவராயினர். இவர் காலத்தில் இவர் குடும்பத்தார் **பூதூர்** நீங்கிப் **போற்களந்தை** குடிபுக்கனர். இவர் காஞ்சிபுரஞ்சென்று கல்வி பயின்றனர் என்பதும் பிறகு கல்வியிற்சிறந்து விளங்கினர் என்பதும் "தமிழ் நாவலர் சரிதை" ‡ யிலுள்ள பின்வரும் அடிகளாற் றெரியவரும். "கவிவீரராகவன் காஞ்சிபுரத்திற் படித்தபோது கந்தபுராணங் || கச்சியப்பர் பாடியது :—

"போங்குபுக ழயோத்தியில்வாழ் தசரதனென் போனிடத்தும் பூதூர்வேந்தன்
துங்கவடு கன்னிடத்தும் வீரரா கவரிருவர் § தோன்றி னரால்
அங்கொருவ¶ னொருகலைமா னெய்திடப்போய் வசைபெற்றா னவனி பாலன்
இங்கொருவன் $ பல்கலைமா னெய்திடப்போய்க் கவியினா லிசைபெற் றானே."

"ஏடாயி ரங்கோடி †† யெழுதாது தன்மனத் தெழுதிப் படித்தவிரகன்
இமசேது பரியந்த மெதிரிலாக் கவிவீர ராகவன் விடுக்குமோலை
சேடாதி பன்சிர மசைத்திடும் புகழ்பெற்ற திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலம் புரந்துதா கந்தீர்த்த செழியனெதிர் கொண்டுகொண்க
‡‡பாடாத கந்தருவ மெறியாத கந்துகம் பற்றிக் கொலாத கோணம்
பறவாத கொக்கனற் பண்ணாத கோடைவெம் படையிற் §§ றொடாதகுந்தம்

---

* '**சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ்**' என்னும் நூலுக்கு எழுதிய முகவுரையினின்றும் எடுத்து அதனோடு சிலவற்றைக் கூட்டியும் அதினின்று சிலவற்றைக் குறைத்தும் இங்குப் பதிப்பிக்கப்பட்டுளது.

† 'இது செங்கழு நீர்ப்பட்டு' என்பதன் திரிபு. ‡ இஃது ஏட்டுப் பிரதியிலுள்ளது, இன்னும் அச்சிடப்படவில்லை. || இவர் கந்தபுராண நூலாசிரியராயகச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளாயிருந்தாலு மிருக்கலாம். கந்தபுராணத்திற் றேர்ந்த வேறொருவராயிருந்தாலு மிருக்கலாம். முன்னையோரெனச் சொல்லின் முரணுவார்சிலருளர். § (1) ஸ்ரீ இராமபிரான் (2) அந்தகக்கவி வீரராகவன். ¶ கலைமான் = மாரீசனாகிய மாயமான், பல்கலைமான் = சரஸ்வதி (கல்வி). $ 'ஏடாயிரங்கோடி **எழுதுவன்றன்மனத்** தெழுதிப்படித்த விரகன்' எனவும் பாடம். †† கந்தருவம் = இசை; குதிரை. கந்துகம் = பந்து; குதிரை. கோணம் = வளைந்த வளைந்தவாள்; குதிரை. கொக்கு = ஒரு பறவை; குதிரை. கோடை = வேனிற்காலம்; குதிரை. குந்தம் = சூலம்; குதிரை. இப்பதங்கட்கு இங்குரைத்த இருபொருள் உளவேனும் தத்தம் அடைமொழியால் முன்னைய பொருள் நீங்கப் பின்னையதாகிய குதிரை யென்னும் ஒன்றனையே குறித்து நின்ற தென்க. ‡‡ '**படையாய்த்** தொடாத குந்தம்' எனவும் பாடம்.

*சூடாத பாடலம் பூவாத மாவொடு தொடுத்துமுடி யாதசடிலம் [ண்டுமே,"
சொன்னசொற் சொல்லாத கிள்ளையொன் றெங்குந் துதிக்கவர விடல்வே

இச்சீட்டுக்கவியின் முதலடியினுல் இவர் கல்வி கற்ற அருமை இவ்வள வின தென்பது ஒருவாறு தெரியவரும். காஞ்சீபுரத்திற் கல்விகற்றுப் பிறகு தம்மூராகிய பொற்களந்தை நகர்போந்து தம் மனையாளொடு வாழுநாட்க ளில் ஒருநாள் தாம் வெளிச்சென்று திரும்பிவருவதை அருகிருந்தவர்களி லொருவர் அவர்தம் மனைவிக்குத் தெரிவிக்க, அவள் இவரது பெருமையைக் குறியாது அங்கவீனமாகிய சிறுமையைக்குறித்து 'இவர் வித்வத்திறமையி னுல் யானைக்கன்றும் வளநாடும் பெற்று வந்தனரோ?' என்று மிக்க அலக்ஷிய மாய்ச் சொல்ல, அதனைச் செவியுற்ற நம்புலவர், "அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க், கிவ்வுலக மில்லாகி யாங்கு" என்பதை மனத்திற் கொண்டு, மனைவியிகழ்ந்ததன் காரணமறிந்து உடனே பொருள் தேட நிமித் தம் வீட்டைவிட்டுப் புறப்பட்டு ஒரு சிஷ்யனைத் தம்முடன்கொண்டு தேச யாத்திரை சென்றனர். இதற்கிடையிற் பல சிறு நூல்களையும் பெருநூல் களையும் விடுகவிகளையு மியற்றினர். அவ்வாறு போம்போது ஒருநாட் கவிரா யர் தம் சீடனுடன் ஒரு குளக்கரையில் தங்கியிளைப்பாறிக் கொண்டிருக் கையில் அவர் கொண்டுவந்த கட்டமுதை நாய் தூக்கிக்கொண்டு போய்விட் டது. அப்போது அவர் பாடிய செய்யுள் :—

† "சீராடை யற்ற வயிரவன் வாகனஞ் சேரவந்து
பாராரு நான்முகன் வாகனந் தன்னைமுன் பற்றிக்கெளவி
நாரா யணனுயர் வாகன மாயிற்று நம்மைமுகம்
பாரான்மை வாகனன் வந்தே வயிற்றினிற் பற்றினனே."

அவர் பிறகு மேற்சென்று சோழநாட்டை யடைந்து அங்குச்சிலநாளிரு ந்து அதன் பிறகு ஈழநாட்டிற்குச் சென்றனர். அதன் வடபாகத்தை அக் காலத்திற் **பரராசசிங்கம்** என்னும் தமிழரசன் ஆண்டுகொண்டிருந்தான். அவ்விடஞ்சென்று அவர் அரசனுடைய பேட்டிக்குப் பலநாட்காத்திருந்தார். அப்படிக் காத்திருந்தும் அரசனைக்காணும் சமயம் சீக்கிரத்தில் வாய்க்கவில்லை. அரசனைத் தவிர மற்றெல்லோரும் நாளடைவிற் கவிராயருடைய கல்வித் திறத்தினையும் யாழ்வாசிக்கும் திறத்தினையுங்கண்டு களித்தனர். ஆயினும் அரசன் சபையிலுள்ள வித்துவான்களும், பாவலரும், நாவலரும் அவருடைய வரவை அரசர்க்குத் தெரிவித்திலர். அவர் பலநாளாக அரசனுடைய பேட்டி தேடிவந் திருக்கின்றனர் என்பதும், யாழ்வாசிப்பதில் மிக்க திறமையுடை யவரென்பது மொருநாளறிந்த அரசன் மனைவி அரசன்மீது கோபங்கொ

* பாடலம் = பாதிரிப்பூ; குதிரை. மா = மாமரம்; குதிரை சடிலம் = சடை; குதிரை. கிள்ளை = கிளி; குதிரை. வயிரவன் † வாகனம் = நாய். நான்முகன் வாகனம் = அன்னம். நாராயணன் வாகனம் = கருடன் (பருந்து). மைவர்கனன் = ஆட்டுக்கடாவை வாகன மாக உள்ளவன் = அக்கினி.

ண்டு அன்றிரவு அவன் பள்ளியறைக்கு வந்தபோது வழக்கப்பிரகாரமிராது கடுகடுத்த முகத்துடன் ஒதுங்கி நின்றனள். இக்கோபத்திற்குக் காரணம் இன்னதென அறிகிலாது அரசன் அவள் கோபத்தை ஆற்றமுயன்றும் முடியவில்லை. மறுநாட்காலையில் அரசனது சிங்காரவனத்திலிருந்த ஒரு மரப்பொந்திற் கிளி ஒன்று வெளியே வருவதும் உள்ளே போவதுமாயிருந்தது. இதையுற்று நோக்கிக் கொண்டிருந்த அரசற்கு இதன் காரணம் இன்னதெனப் புலப்படவில்லை. முன்னரே மனைவியின் கோபத்திற்குக் காரணம் இன்னதெனத் தோன்றவில்லை. அதனால் அரசனுக்கு மனக்கவலை அதிகமாய்விட்டது. அரசன் கொலுமண்டபத்திற்கு வந்தவுடன் அவ்விடத்துள்ள புலவர்களை நோக்கி, "என்மனத்துள கவலை யின்னதெனவும் அதற்குக்காரணம் ஈதெனவுங் கண்டு உரைமின்" என்னலும், 'கண்டசுத்தி' பாடும் புலவர்களும் ஒன்றுந்தோன்றாது விழித்தார்கள். அவர்கள் விழிக்கும் விழிக்குத் திக்குசள் எட்டும்போதாவாயின. அவர்களில் ஒருவர் அரசனுடைய மனக்கவலையை எப்படியாயினும் நீக்கவேண்டுமென்னும் எண்ணங்கொண்டு அந்தகக் கவிவீரராகவ முதலியாருடைய ஆற்றலையும் குணத்தையும் அரசற்கு எடுத்துரைத்து அவர் அதன் காரணத்தை உரைக்கவல்லவர் எனலும் அரசன் அவரை வரும்படி உத்தரவு செய்தான். அவர் வந்தபோது அவர் அந்தகராயிருத்தலால் இராஜ தரிசனத்திற் குரியரல்லர் என்னுங் காரணம்பற்றி இராஜசபையிற் குறுக்கே ஒருதிரை போடப்பட்டிருந்தது. கவிராயருடன் வந்த கற்றுச்சொல்லி தானு மவரும் கொலு மண்டபத்தை அணுகினவுடன் குறுக்கேயிருந்த திரையைக்கண்டு, * "திருச்சிற்றப்பலம்" என்னவே, குறிப்பறிந்த குரவர் "முத்துத்திரை இற்றுவிழ" என்றனர். உடனே திரை அறுந்துவிழுந்தது. அதைக் கண்டோர் அச்சமும் பக்தியும் பெருகி அவரை அரசற்கு அருகே கொண்டுபோய் ஒரிருக்கையில் உட்காரவைத்து உபசரித்தனர். பிறகு அவரை இன்னும் பரீக்ஷிக்கவேண்டி அரசனுடைய கையில் ஒரு வில்லு மம்புங்கொடுத்து, 'அரசனுடைய கோலம் எம்மாதிரியானது?' என்று மந்திரிமார் கேட்க, அவர்,

† "வாழு மிலங்கைக்கோ மானில்லை மானில்லை
ஏழு மராமரமோ விங்கில்லை—ஆழி

---

* 'சிவசிதம்பரம்' என்றான் எனவும், அவர் 'அது அண்ணாமலையாகாதோ' என்றார் எனவும், உடனே திரை அக்கினிக்கிரையாயதெனவும் சொல்வர் சிலர். இரட்டையர்களைப் பற்றியும் இதைப்போன்று ஒரு கதை வழங்குகின்றது.

† 'இலங்கைக்கரசனாகிய இராவணன் இப்போதோ இவ்விலங்கையில் இல்லை, மாரீசனாகிய மானுமில்லை. ஏழுமராமரமும் இவ்விடத்தில்லை. சேது பந்தனஞ்செய்த ஸ்ரீராமனைப்போன்று விளங்கும் ஏ! அபிராமா! கையில் வில்லுங் கணையுங் கொண்ட காரணம் யாது?' என்பது இதன் பொருள்.

அலையடைத்த செங்கை யபிராமா வின்று
சிலையெடுத்த வாறெமக்குச் செப்பு"

என்று சொல்லிப் புத்திசாதுரியமாக அரசன் சோலத்தைப் போர்க் கோலமாக்கி உத்பிரேக்ஷித்துக் காட்டினர். பிறகு அவரை வருவித்ததன் காரணத்தைத் தெரிவிக்க, அவர் அரசனுடைய உட்கருத்தையும் அதன் காரணத்தையு மறிந்து பாடிய செய்யுள் :—

†" வடவைக் கனலைப் பிழிந்துகொண்டு மற்று மொருகால் வடித்தெடுத்து
வாடைத் துருத்தி வைத்தூதி மறுகக் காய்ச்சிக் குழம்புசெய்து
புடவிக் கயவர் தமைப்பாடிப் பரிசு பெருமற் றிரும்பிவரும்
புலவர் மனம்போற் சுடுநெருப்பைப் புழுகென் றிறைத்தாற் பொறுப்பா [ளோ
§ அடவிக் கதலிப் பசுங்குருத்தை நச்சுக் குழலென் றஞ்சியஞ்சி
அஞ்சொற் கிளிகள் பஞ்சரம்விட் டகலா துறையு மகளங்கா
திடமுக் கடவா ரணமுகைத்த தேவே தேவ சிங்கமே
திக்கு விஜயஞ் செலுத்திவருஞ் செங்கோ னடாத்து மெங்கோவே."

அரசன் தானினைத்திருந்த இரண்டு விஷயங்களும் அதற்குத்தக்க காரணங்களும் இப்பாட்டாற் புலப்படப்பெற்றுக் கவிராயர்க்குப் பற்பல பரிசளித்தனன். அவற்றில் யானைக்கன்றும் பொற்பந்தமும் முக்கியமானவை. அவர் தாம் பொற்பந்தம் பெற்றபோது பாடிய வெண்பா :—

" போங்குமிடி யன்பந்தம் போயதே யென்கவிதைக்
கெங்கும் விருதுபந்த மேற்றதே—குங்குமந்தோய்
வெற்பந்த மானபுய வீரபர ராசசிங்கம்
பொற்பந்த மின்றளித்த போது."

யானை பெற்றதற்குப் பாடிய விருத்தம் :—

"இல்லெனுஞ்சொல் லறியாத சீதையில்வா ழுநானனைப்போய் யாழ்ப்பா ணன்
பல்லைவிரித் திரந்தக்கால் வெண்சோறும் பழந்தூசும் பாலி யாமற் [யான்
கொல்லவினைந் தேதனது * நால்வாயைப் பரிசென்று கொடுத்தான்பார்க்குள்
தொல்லையென †தொருவாய்க்கும் நால்வாய்க்குமிரையெங்கே துருவுவேனே"

இவ்வாறு சொன்னபோது அரசன் அவ்யானைக் கன்று வளரும்படியான நாடுங் கொடுத்தான். பிறகு சிலகாலம் அவர் அந்த அரசனிடத்திருந்தார். ஈழ நாட்டுப் புலவர்கள் கவிவீரராகவ முதலியாரவர்கட்கு விடுத்தவினக்களும் அவர் பகர்ந்த விடைகளும் வருமாறு :—வினு :—உதிரமுண்ணும் பறவை

† (1) மனைவி சினங்கொண்டதற்குக் காரணம் கவிராயர்க்கு அரசன் பேட்டி கொடாதிருந்தது. § (2) கிளிவெளியே செல்லாததற்குக் காரணம் காற்றிலசையும் வாழைக் குருத்தை நச்சுக்குழலென்று பயப்பட்டிருந்தது.

* நால்வாய்—தொங்குகின்ற வாயையுடையது (யானை).

† ஒருவாய் நால்வாய் என்பதனற் பெறப்படு நயமுங்காண்க.

யாது ? **விடை** :—துக்கம். **வினு** :—'பசும்பால்' என்னும் பண்புத்தொகைக் குப் பொருளென்ன ? **விடை** :—கார்காலத்து வெள்ளாட்டுப்பால். **வினு**:— " பங்கமின் மாது பசுமஞ்ச ணன்றிழந்தும், மங்கலமு நன்கலமு மற்றிழவாள்" பின்னிரண்டடியும் யாவென, **விடை** :—சங்கையென்ன " மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன், நன்கல நன்மக்கட் பேறு" என்று அவர்கள் கேட்ட தற்கேற்பத் தனிச்சொல் தான் இடைப்பெய்து திருக்குறளி லொருகுறளைக் கொண்டு விடைகொடுத்தார். *

இவர் இராமாயணம் அவதானித்துச் சொன்னபோது அரசன் (பரராச சிங்கம்) பாடியது :—

" இன்னங் கலைமகள் கைம்மீதிற் புத்தக மேந்தியந்தப்
பொன்னம் புயப்பள்ளி புக்கிருப் பாளென்ன புண்ணியமோ
கன்னன் சயந்தன் கவிவீர ராகவன் கச்சியிலே
தன்னெஞ்ச மேடெனக் கற்ருன் கனமுத் தமிழையுமே."

இக்கவியினுலும் இவர் கற்றறிந்த அருமை தெரியவரும். இவர் அரசன் மீது வண்ணம் பாடியபோது அதன் சொன்னேக்கும் பொருணேக்குந் தொடைநோக்குங் கண்டுகளித்து இவருடைய கல்வித்திறத்தை அரசன் வியந்த செய்யுள் :—

" விரகன்முத் தமிழ்க்கவி வீர ராகவன்
வரகவி *மாலையை மதிக்கும் போதெலாம்
† உரகனும் வாணனு மொப்பத் தோன்றினுற்
சிரகர கம்பிதம் செய்ய லாகுமே."

இவரியற்றிய **ஆநநுலா**வைக் கேட்டு ஆனந்த மடைந்து பரராசசேகரன் (பரராசசிங்கம்) பாடியது :—

§ " புவியேர் பெறுந்திரு வாரூ ருலாவைப் புலவர்க்கெல்லாஞ்
செவியே சுவைபெறு மாறுசெய் தான்சிவ ஞானமனு
பவியே யெனுநங் கவிவீர ராகவன் பாடியநற்
கவியே கவியவ னல்லாத பேர்கவி கற்கவியே."

---

* இவ்வினுக்கள் மொத்தம் ஐந்தென்றும், அவற்றிலிரண்டு தமக்கு ஞாபகமில்லையென்றும், அந்தகக் கவிராயர் மரபிற்றேன்றிய காலஞ்சென்ற கவி வீரராகவ முத்துசாமி முதலியார் சொல்லத்தாம் கேட்டதாக வித்வான் ம-ா-ா-ஸ்ரீ மாகறல் - கார்த்திகேய முதலியார் தெரிவித்தனர்.

† இஃது இவரியற்றிய கழுக்குன்ற மாலையைக் குறித்த தென்பாரு முளர்.

‡ சிரக்கம்பிதம் செய்ய ஆயிரந்தலைகளையுடைய ஆதிசேடனும் கரக்கம்பிதம் செய்ய இரண்டாயிரம் கைகளையுடைய பாணுசுரனும் வேண்டு மென்பது.

§ **ஆநநுலா** ஆசிரியர் இவர்தாமோ வெனச் சரியாய் அறியும் பொருட்டுக் கும்பகோணம் காலெஜ் தமிழ்ப்பண்டிதர் பிரமஸ்ரீ உ. வே. சுவாமிநாத ஐயரவர்கட்கு எழு

பிறகு இவர் யாழ்ப்பாணத்திற் சின்னாளிருந்து தான் பெற்ற பல்லக்கு முதலிய பரிசுகளுடனும் பரிவாரங்களுடனும் தன்னூர்க்குத் திரும்பிவந்தனர். இஃதிப்படியாக, 'யாழ்ப்பாண வைபவம்' என்னு * நூலில், ஈழ நாட்டை அரசாண்ட உக்கிரசிங்க ராஜனுடைய குமாரன் வாலசிங்க ஜயதுங்க வரராஜன் காலத்து இவர் யாழ்ப்பாணத்திற்குப் போனரென்பதும் இன்னுஞ் சில விஷயங்களும் தெரிய வருகின்றன :—" இரண்டு கண்ணு மிழந்த கவிவீரராகவ முதலியா ரென்பவர் யாழ்ப்பாண வாலசிங்க மகாராஜன்பேரிற் பிரபந்தங்களியற்றிச் செங்கடக நகரிக்குப்போய் ராச சமுகத்தில் யாழ்வாசித்துப் பாடி வருங்காலத்தில் அரசன் மிகச் சந்தோஷப்பட்டு இலங்கையின் வடதிசையிலுள்ள மண்திடல் என்னும் நாட்டை அவருக்கு உபகாரமாக்கொடுத்தான். இந்நாட்டுக்கு அவர் யாழ்ப்பாணம் எனப் பெயரிட்டு இவ்விடம் வந்து சேர்ந்து வடதிசையி லிருந்து சில தமிழ்க் குடிகளை யழைப்பித்து அக்காலத்திற் சிங்களவரையும் மற்றும் பிறரையும் அரசாளக் கருதித் தமிழ்க் குடிகளையு மங்கிருந்த சிங்களவருடன் குடியேற்றிச் சிலகாலம் அரசாட்சி செய்து வயோதிகராய் இறந்தார். இப்படி யிருக்குங்காலத்துப் பொன்பற்றியூர் வேளாளனாகிய பாண்டிவளவ னென்னும் பிரபுவின் முயற்சியால் திரை உக்கிரசோழன் மகன் சிங்ககேதுவுக்கு மருகனாகிய சிங்கையாரியன் என்பவன் பிறகு யாழ்ப்பாணத்திற்கு அரசனாயினான். அவன் அப்போது பற்பல இடங்களிலிருந்த வேளாளரைக் கொண்டு வந்து இவ்விடம் குடியேற்றினான். அவர்களில் உயர்குல வேளாள மரபினராகிய தொண்டை மண்டலத்து மண்ணாடுகொண்ட முதலியாரை இருபாலையிலும், **செய்யூர்** இருமரபு துய்ய தனி நாயக னென்னும் வேளாளரை நெடுந்தீவிலுங் குடியேற்றினன். * * * * சிங்கையாரியன் காலத்துப் புவனேகவாகு என்னும் மந்திரி அங்குள்ள கந்தசாமி கோயில் திருப்பணி சாலிவாகன சகம் 870 - ஆம் (870 + 78 = 948-கி. பி.) வருஷத்தில் நிறைவேற்றினான்."

'யாழ்ப்பாண வைபவம்' என்னும் நூலிலுள்ள இவ்விஷயம் முழுதும் உண்மையென நம்புவதற்கிடமில்லை. அவரங்கேயே யிருந்திறந்தா ரென்பதும் யாழ்ப்பாணத்திற்கு அரசராயிருந்து ஆண்டனர் என்பதும் அவரிருந்த காலம் கி. பி. 948-ஆவது வருஷத்திற்கு முற்பட்டது என்பதும் பொருத்த முற்றனவாகத் தோற்றவில்லை. அவர் தமிழர்களை அவ்விடங் குடியேற்றியிருக்கலாம். மற்றவை எவ்வளவு உண்மை யென்பதுமேலே தெரியவரும். இவர் பரிசுபெற்றுத் திரும்பித் தம்மூர்க்குப் போம்போது திருநெல்வேலியிலுள்ள **கயத்தாற்று** அரசன்பேரில் ஒருலாப் பிரபந்தம் பாடினர். அதனைக்

திக் கேட்ட போது அவர், " ஆரூருலா கவிவீரராகவ முதலியார் செய்ததே. வேறெவருஞ் செய்யவில்லை. இவ்வுலாவை யான் பலமுறை படித்திருக்கிறேன். விரைவிற் பதிப்பிக்கவுங்கூடும்" என்று எழுதியது கண்டு களிகூர்ந்தேன்.

* பக்கம் 11 - 14.

**உருப்பசி** :—(ஆசையோடு பார்த்து) வேற்றிடத்தை யடைந்திருக்கின்ற சுவர்க்க மென்றே சொல்லத்தக்க தன்றோ. (ஆலோசித்து) அடைந்தோரை யளிக்குமிவர் எங்கேதானிருப்பர் ?

**சித்திரலேகை** :—நந்தனவனம் போன்ற இந்தப்பிரமத வனத்தி லிறங்கி யறிவோம்.

[இருவரும் இறங்குகின்றனர்.]

**சித்திரலேகை** :—(அரசனைப்பார்த்து) தோழி ! பிரதமையி லுதித்த கடவுட் சந்திரன் நிலாவைப்போல் இவர் உன்னை எதிர்பார்க்கின்றனர்.

**உருப்பசி** :—(பார்த்து) அடி ! இப்போது அரசமுனிவர், முதனோக்கினிலும் விசேடமுடைய ஆசைநோக்குடையவராக எனக்குத் தோற்றுகின்றனர்.

**சித்திரலேகை** :—தக்கதுதான்.

**உருப்பசி** :—இவர், சனமில்லாத விடத்தில் தன்னருகிலுள்ள தோழனோடு ஏதோ ஒன்றை ஆலோசித்துக்கொண் டிருக்கின்றார். நான் திரக்கரிணி வித்தையில் மறைந்துகொண்டு இவரருகினின்று கேட்பேன்காண்.

(சொன்னபடி செய்கின்றனர்)

**விதூடகன்** :—தோழ! சிந்திக்கப்பட்டது அடைதற்கரிய காதலியை யடையுமுபாயம்.

(அரசன் சும்மாவிருக்கின்றான்)

**உருப்பசி** :—எவள், இவரால் வேண்டப்பட்டவளாய்த் தன்னைப் பேறுபெற்றவளாக்குகின்றாளோ இப்பெண் யாவள்காண் ?

**சித்திரலேகை** :—என்ன ? மனிதத் தொழில் மேற்கொள்ளப் படுகின்றது?

**உருப்பசி** :—மேன்மையினால் விரைவி லறிந்துகொள்ளமாட்டாதவளாயிருக்கின்றேன்.

**விதூடகன்** :—அடையுமுபாயஞ் சிந்திக்கப்பட்டதென்று சொல்லுகின்றேன்காண்.

**அரசன்** :—ஆனாற் சொல்.

**விதூடகன்** :—நீ கனவிற் சேர்க்கையைப் பண்ணும் தூக்கத்தைக் கொள்வாயாக ; அன்றேல், அங்கவளுருப்பசியினது சித்திரவுருவத்தைப் பார்த்துக்கொண்டேயிரு.

**உருப்பசி** :—வலியற்ற நெஞ்சமே ! ஆற்றிக்கொள், ஆற்றிக்கொள்.

**அரசன்** :—இரண்டுங் கூடாதவைகளே.

மன்மதன் சரத்தா லிம்மன நாளு மன்னிய சல்லிய துள்ளே [மால் தன்கன விடையே சேர்க்கையைச் செய்யத் தகுந்துயி லெங்ஙனம் வரு

நன்முகத் தினளாங் காதலி யவளை நலமுறச் சித்திரத் தெழுவ
நன்கன மெழுதி முடிப்பதன் முனமே நயனநீர் நிறைவன வன்றே. ()

சித்திரலேகை :—உன்னாற் கேட்கப்பட்டதா ?

உருப்பசி :—கேட்கப்பட்ட தென்னால் ; மனத்துக்கோ திருத்தியுண்டாக வில்லை.

விதூடகன் :—இவ்வளவினதே எனது புத்தியின் பெருமை.

அரசன் :—(பெருமூச்சோடு)

அவண்மிகக் கடின மாய வென்னக நோயை யுன்னாள்
பவமதி னறிந்த வாசை படரெனை யிகழ்ந்தாள் கொல்லோ
பவரலர்க் கணையன் கிட்டாப் பலத்தின நீர்மை யற்ற
அவள்புணர்ப் பாசை யெற்கிங் கமைத்துநற் சுகியாய் வாழி. (30)

சித்திரலேகை :—உன்னாற் கேட்கப்பட்டதா ?

உருப்பசி :—ஆ ! சீ ! ஆ ! சீ ! என்னையு மிவ்வாறு நினைக்கின்றனர் மகாராசர் ! இவர்க்குமுன்னே மறுவார்த்தை 'சொல்ல வலியற்றவளாயிருக்கின்றேன் ; பிரபாவத்தினு லுண்டாக்கப்பட்ட புயமரப்பட்டைப் பத்திரிகையினாற் சம்பாதித்த மறுமொழி யுடையவளாக எண்ணுகின்றேன்.

சித்திரலேகை :—சம்மத மெனக்கு.

(உருப்பசி விலாசத்துடன் எடுத்துச் சொன்னவண்ணஞ் செய்கின்றாள்.)

விதூடகன் :—(பார்த்துப் பரபரப்புடன்) அவித! அவித ! ஓ ! தோழ ! பாம்பின் றோல்போல ஏதோ வொன்று எதிர்முகமாக வருகின்றது.

அரசன் :—(உற்று நோக்கி) இது, மரப்பட்டையுள் வரையப்பட்டுள்ள அக்கரக்கோவை.

விதூடகன் :—அங்கவளுருப்பசி, நினது அழுகையைக் கேட்டு ஆசையைக் காட்டு மக்கரங்களை விடுத்தாள் ; இஃதுண்மையே.

அரசன் :—மனோரதங்கட்கு அவிஷயம் இல்லை. (எடுத்து வாசித்துக் களிப்போடு) நினது ஊகம் தெள்ளிதே.

விதூடகன் :—நீ தெளிவுடையவனாக விரு ; இங்கெழுதியுள்ளதைக் கேட்க விரும்புகின்றேன்.

உருப்பசி :—ஐய ! நல்ல சதுரனாயிருக்கின்றாய்.

அரசன் :—நண்ப ! கேட்பாயாக.

விதூடகன் :—கருத்தாயிருக்கின்றேன்.

அரசன் :—(வாசிக்கின்றான்.)

எங்ஙனநல் வினையில்லா யாவின்னு னன்குமதிப் பெய்தி னேனே
அங்ஙனநற் காதலினை யார்நின்மே லெற்கில்லை யாயின் வாடிப்
பங்கமுறுஞ் சுரதருவின் பனிமலர்மே லெவ்வண்ணம் படுப்பன் றேவர்
துங்கவனக் காற்றுமறச் சுடுவதெவ னென்னுடலிற் சுவாமி மாதோ. ()

உருப்பசி :—இப்போது என்னைதான் சொல்லுகிறுர் ?

சித்திரலேகை :—கமல நாளம்போன்ற அங்கங்களினுல் இவராற் சொல்லப்பட்டதன்றோ.

விதூடகன் :—பசித்திருக்கு மெனக்குச் சுவத்திவாசனப் பணிகாரக் கூட்டம் போல், உனக்கும் இத்தேற்றரவு தெய்வாதீனமாய்க் கிடைத்ததன்றோ.

அரசன் :—தேற்றரவென் றெவ்வாறு சொல்லுகின்றாய்.?

ஒத்த வன்பி னைத்தெ ரிப்ப தொண்பொ ருட்பு ணர்ப்பது
பத்தி ரத்த தாய காதற் பற்றி னுடன் செய்திமேல்
வைத்து கண்ம யிர்கொ ளம்ம தர்த்த கண்ணி னுண்முகம்
ஒத்து நின்று நண்ப னேயு ரைத்த தென்மு கத்தொடே. (32)

உருப்பசி :—இங்கு நமக்கு ஆசை சமபாகத்தினது.

அரசன் :—தோழ ! விரல் வியர்வையால் அக்கரங்கள் அழிவுறும் ; தரிக்கப்படட்டும் காதலியின் கையெழுத்து.

விதூடகன் :—அப்படியே (என்றெடுத்துக்கொண்டு) அங்கவள் உருப்பசி, நினது மனோரதங்களின் மலரைத் தோற்றுவித்துப் பலத்தில் இப்போழ் தேன் தாழ்க்கின்றுள் ?

உருப்பசி :—அருசணை வதற்கு அச்சமுற்றிருக்கும் மனத்தை நிலைப்படுத்திக் கொள்வதற்குள், நீ இவருக்கு நின்னைச்காட்டி எனக்குத் தக்கதெது வோ அதனைச்சொல்.

சித்திரலேகை :—அப்படியே (திரக்கரிணியை நீக்கி யரசனைக்கிட்டி) வெற்றிபெறுக கொற்றவனே !

அரசன் :—(களிப்போடு) உனக்கு நல்வரவா ? (பக்கத்திற்பார்த்து) மங்களத்தினுய் !

அங்ஙனமத் தோழியைநீத் தார்தநீ யோகையினை
இங்கெனக்குச் செய்கின்று யில்லையால்—சங்கமத்தின்
முன்காணப் பட்டுளதாய் மூதமர ராற்றெடிலா
மன்காளிந் தீநதிபோன் மற்று. (33)

சித்திரலேகை :—முன்னர் முகிலினணி காணப்படுகின்றது ; பின்னர் மின்னற்கொடி.

விதூடகன் :—(மறைத்து) இவளெங்ஙன முருப்பசியல்லள் ? அங்கவளின் இனிய தோழியிவள்.

சித்திரலேகை:—உருப்பசி மகாராசனைத் தலைவணங்கி விண்ணப்பிக்கின்றனள்.

அரசன்:—என்ன ஏவுகின்றாள்?

சித்திரலேகை—'அசுரனாலுண்டான உபத்திரவத்தில் எனக்கு மகாராசரே இரட்சகராக இருந்தனர்; அந்த யான், நூந்தரிசனத்திலுண்டான மன்மதனால் வலியப்பீடிக்கப்பட்டவளாய் மீண்டும் மகாராசரால் அருளத்தக்கவள்' என்று.

அரசன்:—கோலமுகத்தினாய்!

பு. மா. ஸ்ரீநிவாசாசாரியர்.

---

## THE CULTURE OF THE INTELLECT.

## உள்ளப்பயிற்சி.

---

### VIII. ஞாபகசக்தி. (Memory.)

முக்கியமாய்ப் பயிற்சியடையவேண்டிய மனத்தின் மற்றோராற்றல் ஞாபக சக்தியாம். ஒருபாற் சேமித்துவைத்தாலன்றி நிதியை ஈட்டுதலில் யாது பயன்? இவ்வாறே நம்மால் ஞாபகத்தில் நிறுத்திவைத்தலிலாதனவற்றைக் கற்பதும் பயனற்றதே. நல்லவேளையாய், மனத்தினாற்றல்களனைத்தினும் இது பயிலப்பயில மிகவும் விருத்தியாவது ஒன்றாம். மேலும், குறுகிய மனோபாவத்திற்காதல், மழுங்கிய பகுத்தறிவிற்காதல் துணைக்கருவிகளில; ஆயினும், ஞாபகசக்திக் குறைவிற்கோ தக்க துணைகளுள. பிற்சாற்றியன மனத்திலொருகாற் படித்த விஷயங்களை ஆங்கே நிறுத்திக்கொள்வதிற் கவனிக்கவேண்டிய மிகச்சிறந்த குறிப்புக்களாம்:—

(1) முதன்முதலிற் படிந்த கருத்து, தெளிவும் கூர்மையுமழுத்தமுமுடைமை. விளக்கமும் தெளிவுமின்றித் தான் உட்கொண்டனவற்றை நினைவு கூர்ந்து கொள்ளலாமென்று ஒருவனும் நம்பவேண்டாம். முன்பின் பிறழ்ந்து மனத்தின்கட் பாய்கின்ற மங்கி ஊற்றமில்லனவாகிய பொருள் நோக்கங்களின் தொகுதி, ஒரே குழப்பமடைந்து, ஒன்றையுங் காட்டலின்றிப் பொருள்களனைத்தையும் மறைத்துத்தானும் மறைந்துபடும். பரந்ததோர் விஷயமுழுவதையும் பற்றிய கலக்கமுற்ற எண்ணங்களுடைமையினும், அதன்கண் ஏதேனுமொரு பகுதியைப்பற்றி மட்டில் தெளிவான கருத்துடைமை ஞாபகசக்திக்கு மிக்க நன்மை பயக்கும்.

(2) ஒழுங்கும் பாகுபாடும் போன்று ஞாபகத்திற்குத் துணைபுரிவது வேறொன்றுமில்லை. என்றும் வகைகள் சிலவே, தனிப்பொருள்கள் பலவாம். வகைபொன்றனை நன்று அறிவது, அவ்வகையின்பாற் பட்ட

தனிப்பொருளின் மிக்க சாரமும், மனத்தில் நிறுத்துவதன்கண் நேரும் கஷ்டத்தைக் குறைப்பதுமான பண்பினை யறிவதாகும். (3) இதனை யடுத்துச் சிறந்தது பல்காற்பயிறல். ஓரடியில் மூளை உட்செல்லாவிடின் மீட்டும் மீட்டும் அதனைக்கடாவுக. இவ்விஷயத்தில் முதலைப் பிடியாயிருத்தல் பயனற்றுப் போகாது. வடமொழியிற் கடவுளைக்குறிப்பது "தேவன்" என்னும் மொழியென்பதை நினைவு கூர்ந்திருத்தல் அரிதெனக் காணுமொருவன், நாடொறுமாதல் வாரந்தொறு மாதல் எவ்வேழு முறை அதனைத் திருப்பித் திருப்பிச் சொல்வானேல், பிறகு ஒருபோதும் மறவான். இயற்கையாய் ஒருவன் தனது ஞாபகசக்தி எவ்வளவு அஃகியதாயிருக்குமோ அவ்வளவு அவன் பன்முறைப் பயிற்சியால் அக்குறையை நிரப்புவான் உறுதிகோடல் வேண்டும். நமதாற்றல்கள் மந்தகதி வாய்ந்த விலங்கினை ஒத்து இடைக்கிடையே கசையடி பெறவேண்டியனவாகின்றன. அல்லவேல் அவை சிறிதும் இடங்கொடாவாம். (4) அன்றியும், ஞாபக சக்தி குறைந்திருப்பிற் சாரணத்துவம் வலியுடைத்தாயினுமாகலாம். நேரிதாகப் பயன்படுத்தினாற் பிற்சாற்றிய இப்பற்றுக்கோடே பார்வைக்கெல்லாம் குறைபாடாயினும் அதை ஒருண்மை நலனாய் மாற்றத்தக்கவாறு நாம் செய்து கொள்ளலாம். மிகத் தீவிரமான ஞாபகசக்தி யுடையோரும் தாமவ்வாற்றலுடைமையில் திருப்தியுற்று உணர்ச்சித்திறம் வாய்ந்து கிள்ளை போன்று பல்லோரும் புகழத் தங்களாற்றலைப் புலப்படுத்துவார்கள். காரணமின்றி நினைவுகூரப் பின்வாங்கும் மனிதனோ விஷயங்களின் காரண வியைபை நன்கு தேர்ந்தறிந்த பின்னர், காரணமில்லாப் பொருள் விளங்காத் தொடர்ச்சியென அவன் மனத்தினியல்பு ஏற்றுக்கொள்ளச் செய்யாததை, பகுத்தறிவினாலாய சில ஒழுங்கிணக்கங்களால் ஒருங்குபிணைக்கின்றனன். (5) செயற்கைப்பொருளிணக்கம் படைத்துக்கோடலும் சில வேளைகளிற் பயன்படும். சிறுவனொருவன் 'திருக்குற'ளும் 'திருவள்ளுவ'ரும் 'திரு'வெனத் தொடங்குதலான் திருக்குறளினாசிரியர் திருவள்ளுவரென நினைவுகூர்தல் இதற்கு உதாரணமாகும். ஆயினும் இத்தகைய தந்திரங்கள் பயிற்சி நன்கு அடையாத ஒரு தலைவியின் வேண்டுகோள்களுக்கு இணங்குவதாமேயன்றி ஆண்மையுற்ற மனச்செயலின் பாற்படாவாம். செயற்கை ஞாபகக்குறி முறையெனச் சாற்றப்படுவனவற்றை ஒழுங்காய் உபயோகப்படுத்துவதில் எமக்கு உறுதியான நம்பிக்கையில்லை. உள்ளுறை யாற்றல்களி னியற்கை யோட்டத்திற்கு இடையூறு செய்யும் காரணமில்லா நகையாடற் குரிய குறிகளை அவைகள் மனத்தில் நிரப்புகின்றன. இவ்வகையந்திர உறுப்புக்களின்வைப்புப் போன்ற முறை சாதாரணமாகச் சரித்திரத்தின்கண் நிகழும் தேதிகளை நினைவுகூரலில் உபயோகப்படுவது வழக்கம். ஆனாலிவைகளைக் காரணப்பற்றுக் கோட்டினாலாதல் தற்செயலாக இயலுறும் ஆன்றோர் நாமத்தொடர்ச்சியாலாதல் நன்கு நினைவு கூர்ந்திருத்தலியலும். சாகரடிஸ் புலவர்பெருமான் நச்சுணு உட்கொண்டபோது பீளேடோ இருபத்தொன்பதா மாட்டைப்பருவ முடை

யார் என்று யாம் ஞாபகம் வைத்திருத்தல் இதற்கு ஒருதாரணமாம். சிந்து நதிக்கரையிலிருந்த பிராமணர்களுடைய வேதமொழியினுடன் சாகரடிஸ் ப்ளேடோ என்பவர்களது பாஷையைக் கைகலக்குமாறுசெய்த ஜயம்பெற்ற ஜனக்கூட்டத்தின் தலைவனும் மாஸிடன் தேயத்துப் பிலிப் எனுமரசனது புகழ்வாய்ந்த மகனுமாகிய அலக்ஸாந்தர் என்பவனுக்கு இந்த ப்ளோடோவின் மாணக்கராகிய அரிஸ்டாடில் ஆசிரியர் என்று நினைவு கூர்ந்திருத்தல் இதற்கேற்ற மற்றொருதாரணம். (6) இறுதியில், ஒருவன் தனது ஞாபகசக்தி எவ்வளவு தீவிரமாயிருந்தபோதிலும் வரைந்து வைக்கப்பெற்ற குறிப்புக்கள் பயக்குமுறுதியான நன்மைகளை எள்ளாதிருக்கக் கடவன். குறியேட்டின்றும் உரைத்தல் ஞாபகசக்தியை வலியுறுத்தாது, மற்று ஞாபகசக்தியைக் குறைக்குமென்ப தொருதலை. ஆயினும். எளிதிற் பயன்படும்படியான விஷயங்களின் தொகுதிகளைக் கையால் தீட்டிய அல்லது அச்சிட்ட குறிப்பாக நிலைபெற வைத்திருத்தல் ஒருங்கே திரட்டியமைக்கப் பெற்ற கணக்கிலாப் பொருள்களை வேண்டுமோரையில் ஒருவன் பயன் படுத்த இயலுமாறு செய்யும். இந்நோக்கத்தைக் கைக்கொண்ட சிறுவன் சில நூல்களின் இடைக்கிடையே வெள்ளேடுகளை வைத்துக் கட்டவும், மற்றுஞ்சில நூல்களுக்கு முதற்குறிப்பகராதி செய்யவும் இவ்வாறு எளிதில் உடனே கண்டறியும்படி தான் அறிபொருள்களைப் பாகுபாடு செய்து அட்டவணைப் படுத்தவும் எவ்வளவு கடிதில் தொடங்குவானுயினும் நன்றேயாம். நமது பாகவதர்கள் இடையேடு வைக்கப் பெற்ற நூல்களைக் கைக்கொண்டு ஏற்ற சிறந்த விடங்களில் அமயத்திற்குப் பொருந்திய உதாரணங்களாக உயிர் வாழ்க்கையில் இயலுறும் விஷயங்களாதல் நூல்களிற் படித்த உபகதைகளாதல், ஆங்காங்கே அருகில் தீட்டி விடுப்பார்களாகில், தங்கள் பிரசங்கங்களை நிச்சயமாகவே மிகமேன்மை பெறச்செய்வார்கள். இயற்கையில் மிகக் குறைந்த ஞாபக சக்தியுடையோராயினும் இக்காலத்திற் சாதாரணமாய் மிகவும் பொருள் விரிவு விளக்கமற்ற தங்கள் ஞானப் பிரசங்கங்களி னிடையிற் சாதனைக் கடுத்த பலப்பல விவகாரங்களுடன் தங்கள் நூற்குவியலி னின்றும் புதுவதும் பழையதுமான பொருள்களுடன் விவரித்தலை அவர்கள் இவ்வாறு அறிவார்கள். இராஜாங்க விஷயங்களிற் பயிலும் மாணவர்கள் அரிஸ்டாடில் என்பவ ரியற்றிய அரசியல் நூலிற் பயன்பெற இடையேடு அமைக்கலாகும். இவ்வாறு பொது ஜனவாழ்க்கையின் மிகவும் இக்காலத்திற்குரிய அனுபவத்தின் பழக்கத்தினனே விளையக் கூடிய முரட்டுத்தனத் தினின்றும் ஒருபுறநோக்கத்தினின்றும் மனத்தைப் பிணித்துச் சீர்திருத்தலாகும்.

ச. கி. சுந்தராசாரியன்.

# THE STATEMEN OF DROUPATHI.

## பாஞ்சாலி கூற்று.

மூதறிவாளர்காள்! மகாபாரதம் பழம்பொருந்து சருக்கத்திற் பாஞ்சாலி கூற்றாகப் புனைந்துள்ள,

"அம்புவி தனிற்பெண் பிறந்தவர்க் கெல்லா மாடவ ரிலாமையி னல்லால்
நம்புதற் குளதோ வென்றனள் வசிட்ட னற்றவப் பன்னியே யனையாள்"

என்ற செய்யுளடிகளால் தற்காலத்தோர் பலரும் பெண்பாலாரெவர்க்குமே கற்பிற் கலங்காத மனத்திட்பம் இலதென்றும் வசிட்ட முனிவரின் இல்லறக் கிழத்தியாய அக்கற்புக்கடவுளே யன்ன பாஞ்சாலியே இங்ஙனம் குறித்தன ளென்பதனால் அவ்வருந்ததி யாதியோர் கற்பும் ஐயுறற்பாற்றென்றும், அங்ஙனம் அம்மாதரசி உலகின்மேல் வைத்துரைத்தது தனது மாசுற்றமன நிலையைக் குறிப்பானுணர்த்துதற் பொருட்டேயாமென்றும், அதற்கநுகுணமாகக் கர்னனிடத்திற் பாஞ்சாலிக்குள் ஒருதலையான காதலிருந்த துண்டெனக் கர்ன பரம்பரையான கதையொன்றுலகின்கண் நிலவுகிறதென்றும் நீளப்பொருள் கொண்டுரைத்தலைக் காண்கின்றோம்.

இவ்வாறு பொருள் கோடலினால் விளையும் இழிவு சிறிதன்று. இஃதிரு பாலார்க்கு முரித்தாமன்றி விலக்கன்றாதலின், இதனைச் சுருதி யுக்தி யநுபவம் எனும் மூன்று வழிகளினுமாராய்ந்து அறிவின் மிக்கோர் எம்போலியாது ஐயவிபரீதங்கள் அகன்றொழியுமாறு தக்க சமாதான அளிப்பார்களென ஆவல் மிகுந்து இஞ்ஞானபோதினி வாயிலாய் எம்மனோர்க்குள்ளெழும் ஐயப்பாட்டினை வரைய விழைந்தனம். நிற்க.

பாஞ்சாலிகற்பே பழுதெனின், அப்பாவையைச் சுயோதனன் அரசவையிற்களைந்த துகில் உலவாக்கிழிபோல் மேன்மேலும் வளர்ந்து மண்ணும் விண்ணும் மதித்து வியக்குமாறு மானங்காத்ததென்? அச்செய்யுளின் இரண்டாமடியினீற்றிலேயே அருந்ததிக் கொப்பாள் என்றுபசரித்த தெவ்வாறு? அதே பாஞ்சாலி தனது முற்பிறப்பினில் நாளாயணி யெனும் பெயர்தாங்கி அங்கமெலா மழுகிக்கரைந்த பிணியுடையராகக் காணப்பட்ட தன் அன்புடைய பதியை வெறாது அப்பதியுடனொருங்குறைந்து அவர்க்குக் குற்றேவல் பலவும் புரிந்து அவர் இவள் மனத்தைச் சோதிப்பான் விருபிச்செய்த சகித்தற்கரிய கொடுமைகள் பலவற்றினையும் சலியாது பொறுத்துக் களிப்புடனிருந்து வந்ததாகக்கூறும் பூர்வ சரிதங்கட்குப் போக்கென்னை?

கற்புக்குக் கட்டளைக் கல்லாக விளங்கிய காங்கை நாளாயணி யல்லளோ? அந்நாளாயணிதானே இப்பாஞ்சாலியா யவதரித்தது. இஃதன்றியும்,

"வெங்கனல் மூழ்கியும் புலன்கள் வீக்கியும்
நுங்குவ அருந்துவ நீக்கி நோற்றவர்
எங்குளர் கற்பினவந் தில்லின் மாண்புடை
மங்கையர் மனத்தவ நவிலற் பாலதோ"

எனவும் "கல்லொடுந் தொடர்ந்த நெஞ்சங் கற்பின்மேற் கண்டதுண்டோ" எனவும் கூறப்பட்ட ஆன்ற முடிபுகள் யாவாம்? கணவன் துஞ்சினனெனல் செவிப்பட்ட வளவில் உயிர்நீத்த சூரபன்மன்மனைவி பதுமகோமளை அம்புவியிற் பிறந்த பெண்ணலளோ? காதலனைக்கண்டு அவன்மேல் வீழ்ந்து புலம்பியதும் உயிர்நீத்த இராவணன் மனையாளாகிய மயன்மகள் பெண்பாலலளோ? முன்னைப் பிறவியிற் கமலச் செல்வியாக எண்ணப்படினும்

ரூதறிவேதுமின்றி மண்ணுலகிலுள்ள ஏனையமாதர் போன்ற இயற்கை யுணர்வு கொண்டே கற்பைக்காத்து அனற்குளித்த சீதாபிராட்டியும் பெண்ணலளோ? இன்னும் ஆராயப்புகின் அகலிகை நீங்க அநசூயையாதிய வேனைய வெண்ணிறந்த முனி பன்னியரும் அரச மாதர்களும் பிறவுமுள்ள கற்புடைக் காந்தையர்களும் கோடிக் கணக்காக நமது முன்னூல்களிற் கண்டுணர்த வெளிதேயன்றோ.

ஆதலின் கற்புடைமாதர்கள் உலகிலறவே வொழிந்தன ரென்றாவது பாஞ்சாலியே கற்பில் வழுவின ளென்றாவது கொள்ளுதற்கிடமில்லை. கொள்ளின் உய்தியில் பெருங் குற்றத்தை யுரித்தாகக் கொள்ளவேண்டுவதுமன்றி அதே பாரதத்தில் முன்பின் ஓதப்படும் கற்பின் பெருமையை வலி யுறுத்துகின்ற கதாபாகங்கட்கு முரணாய் மாறுபடுகின்றதுண்மை. அன்றியும் அம்மங்கை தன் கூற்றில் தவறாய கருத்தினை வைத்தே புகன்றாளெனின், அவளைத் தரும பத்தினியாகக்கொண்ட பாண்டவர் அவ்வுறுதிமொழிகேட்டு யாது புரிந்தனர்? வாளா விருந்தமை எத்துணிபுபற்றி? இல்லாள் என்மனத்தில் மாசுளதெனக் குறிப்பிடக்கேட்ட கணவனுள்ளம் அமைதியுடனிருந்ததெனிற் சிறுபிள்ளைகளும் விம்மிதமுறுவரே! பேடிகளும் பொறாத விடயத்தைச் சுத்தவீரர்களாகிய பாண்டவர் பொறுத்து வாளாவிருந்தன ரென்பதனினும் வசைவேறுண்டோ? ஆண்மை யுடையோர் இக்கருத்தை யறையவுந் துணிவரோ?

சோதரர்காள்! மற்றெவ்வழிச் சென்று கோட்டமில் பொருள் கோடலாகும்? அச்செய்யுட்கருத்து வேறுள்ள ஜைமினி பாரத முதலியவற்றுள் வேறுபடுகின்றதா? அல்லது கண்ணன் வினவிய குறிப்பும் பாஞ்சாலியளித்த விடையும் இன்னனவாமென விளங்கவிரித்தோதிய நூற் பிரமாணம் வேறுளதா? அதுவுமன்றி அச்செய்யுளும் செய்யுட்கருத்துமே சற்பிரமா? அல்லது இச்செய்யுட்கே உலகவழக்கொடுஞ் சுருதி வழக்கொடு மாகொளாத செம்பொருள் வேறுவிரிக்கவுளதா?

இவ்வாறெல்லாம் அடாப்பொருள்கொண்டு இடர்ப்படுதலினும், "சற்பிற்றவறுறவோர் காரிகை, தன் மனத்தாற் பிறரை நச்சாளாயினும் அவள் கட்டழகுடையளேல் ஆடவர் பிறரால் விழையப்படு பொருளே யாவளன்றி அவள் கற்புடையளென வஞ்சி அவ்வாடவரால் வெறுக்கப்படுதல் பெரும்பான்மையு முலகிலின்று" எனும் கொள்கையே கொண்டு அப்பாஞ்சாலியாவாள் "அம்புவி தனிற்பெண் பிறந்தவர்க் கெல்லாம் ஆடவ ரிலாமையி னல்லால்" என்று கூறியதாகப் பொருள்கோடல் (உலகநடைக்கு மாறுபடாதாதலின்) அமைவுடைத்தெனலாம்.

இதற்குத் தான அருங்கற்புடையளாயிருந்தும் தன்பாற் றீயெண்ணமேற்றுப் பல்வழியாலும் முயன்ற கார்த்தவீரியனாற் பின்னர்ப் பரிபவம்பலவெய்திய இரேணுகையே உறு சான்றாம்.

"அல்லலே பெண்ணெனப் பிறத்த லாங்கதி
னல்லலே யிளமையிற் சிறத்த லாங்கதி
னல்லலே கட்டழ குடைமை யாங்கதி
னல்லலே யிரவலர் சார்பி னாகுதல்"

என முன்னோர் கூறியது இதுபற்றியான்றே?

இவையனைத்தையுஞ் சீர்தூக்கி நூற்றுறை 'பழகிய நுண்ணறிவாளரெவரேனும் நற்பொருளிதுவென நாட்டிப் புகழ்பெறுமாறு எதிர்விழைகின்றனம்.

அசலாம்பிகையம்மை.

## REVIEWS OF BOOKS.

## புஸ்தகக் குறிப்புக்கள்.

### திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை :

[இது திருப்பத்தூர் - ஸ்ரீமான் கல்யாண சுந்தர நாடாரவர்கள் சென்னைச் சின்னைய நாடாரச்சுக்கூடத்திற் பதிப்பித்தது. இதன் விலை : அணா-8. தபாற்கூலி வேறு.]

இந்நூல் சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் உதவித் தமிழ்ப்பண்டிதர்களுள் ஒருவராகிய **நாகபட்டினம் - ஸ்ரீ வேதாசலம் பிள்ளையவர்கள்** இயற்றியது. இந்நூலியற்றற்காரணம் பிரார்த்தனை மாத்திரை யென்பது நூல் வரலாற்றினுன் விளங்கும். நூலின் காப்புச் செய்யுளில் முப்பது முழு முதற்சொற்களிருத்தல்கண்டு அதற்கியைய முப்பது செய்யுட்களானியன்ற மும்மணிக்கோவையாக இது யாக்கப்பட்டதென்பர். ஆசிரியப்பா, வெண்பா கட்டளைக்கலித்துறை யென்னும் மூவகை யாப்பும் முறையே மாறி மாறி வரப்பாடப்படுவதாம் இப்பிரபந்தம். இத்தகைய கோவை, மாலை முதலிய நூல்கள் அந்தாதித்தொடை மண்டலித்து வருதல் வேண்டுமென்பது ஒரு நியமமாம். அந்நியமமும் ஓராற்றால் இந்நூலின்கண் தழுவப்பட்டுளது. இறுதிப்பாடலின் இறுதிச்சீர் முதற்பாட்டின் முதற் சீரோடு அந்தாதித் தொடை மண்டலித்து வாராமை சில்லோர்க்கு இழுக்கெனத்தோன்றலாம். நெஞ்சொடு கிளத்தல், அருளியல் புகரைத்தல், காம மிக்க கழிபடர்கிளவி, முதலிய பற்பல துறைகளினும் செய்யுட்கள் யாக்கப்பட்டுள. பத்துப் பாட்டுப் புறநானூறுதிய சங்கச்செய்யுட்களில் இந்நூலாசிரியருக்குப் பழக்க முடைமை இந்நூலைப் படிப்பார் யாவருக்கும் தெற்றென விளங்கும். சிற்சில சொற்களும், சொற்றொடர்களும், அப்பழமை மணம் கெடாதவாறு இப்புது நூலின்கண் அமைக்கப்பட்டிருத்தல் மிகவும் வியக்கத்தக்கதே. இயற்கைப்பொருட் சிறப்பும், அணிநலப்பொலிவும், மிக்கு விளங்கு மிந்நூலினை யாவரும் ஏற்று மேற்கொள்வாரென்பதொருதலை. இத்தகைய இனிமையும், பொருட்செறிவும், யாப்பழகும் வாய்ந்த நூல்கள் பல நமது பிள்ளையவர்கள் மேன்மேலு மியற்றிச் செந்தமிழுலகத்தைக் கடமைப்படுத்து வாராக.

### தனிப்பாசுரத்தொகை : முதல் வரிசை :

[இது சென்னை மினெர்வா அச்சுக்கூடத்திற் பதிப்பித்தது. இதன் விலை ரூபா - 1. தபாற்கூலி வேறு.]

இந்நூலின் பாசுரங்கள் நமது ஞானபோதினியின் கண்ணே அவ்வக் காலங்களிலே வெளியாயிருக்கின்றன. அவை யனைத்தும் 1899 - ஆம் வருஷம் திரட்டி அச்சிடப்பட்டன. அப்பதிப்புப் பிரதிகள் விசேஷமாய்ச் செலவாய்விட்டமையின் வேறு பதிப்பு வெளியிடக்கருதிய நூலாசிரியர், ஆங்கில நாட்டிற் கோதிர்த்சபுரிச் சர்வகலாசாலையில் தமிழ்ப்புலமை நடாத்தும் கனம்பொருந்திய **ஜீ. யூ. போப்பையரவர்கள், எம். ஏ., டி டி.,** செய்தளித்த ஆங்கிலமொழிபெயர்ப்பையும் உடன் கூட்டி அச்சிட்டிருக்கின்றனர். இப்பதிப்புத் தமிழ்மகண் மேகலையுள் இரண்டாம் கிங்கிணியாம். இது சென்னைத் தேசாதிபதியவர்களாகிய ஆம்ட்ஹில் சீமான் அவர்க

ளுக்கு அங்கிதஞ்செய்யப்பட்டுளது; காலஞ்சென்ற ராவ் பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களாற் சிறப்புப்பாயிரம் சொல்லப்பெற்றது. மேற்கூறிய ஆங்கில மொழிபெயர்ப்பாசிரியராகிய போப்புத்துரையவர்களுடைய முகவுரையுங் கொண்டது; கடவுள் முதல் திருவள்ளுவரிறுதியாகவுள்ள 41-தனிப்பாசுரங்களடங்கியது. முன்னிற் பதிப்பிற்போலாது நூலின் பாசுரங்களனைத்தும் முறைப்படுத்து ஒழுங்குபெற வைக்கப்பட்டுள. இந்நூல் புல்லோரானும் இனிது பாராட்டி மேற்கொள்ளத்தக்க நலம் வாய்ந்து விளங்குகின்றமை யாவர்க்கும் ஒப்ப முடிந்ததே. நல்ல பளபளப்புள்ள உயர்ந்த கடிதத்தில் நன்கு பதிப்பிக்கப்பட்டிருக்குந் தன்மை யாவரும் கவனிக்கத்தக்கதே. முற்பதிப்பிற்கும் இப்பதிப்பிற்கும் சிற்சிலவிடங்களில் வேறு பாடங்கள் காணப்படுகின்றன. இந்நூலாசிரியராகிய சென்னைக் கிறிஸ்த்தவ கலாசாலைத் தலைமை தமிழ்ப்பண்டிதர் **பிரமஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் அவர்கள் பி. ஏ.,** மேன்மேலும் இத்தகைய நல்வழியிலுழைத்துப் புது நூல்கள் வெளிப்படுத்துதற்கண் இறைவன் திருவருள் புரிவாராக. இனி, இத்தகைய சிறப்புவாய்ந்த இந்நூல் வெளிவந்து மூன்று வருடமாயும் நம்முடைய சர்வகலாசங்கத்துத் திராவிட பாட சபையாரால் இதுகாறும் கவனிக்கப்படாதிருந்ததேனோ? அறிகிலேம். இவ்விஷயத்தை அன்னவதிகாரிகள் கவனித்து இந்நூலினைப் பிரதம கலா பரீக்ஷைக்குத்தக்கதோர் பாடமாக ஏற்படுத்தி நூலையும் நூலாசிரியரையும், மேன்மைப்படுத்துவார்களென்று நம்புகின்றோம்.

காங்கிரேஸ்மகாசபை :

[இது சென்னைச் சடகோபாசாரியர் அண்ட் கம்பெனியார் பதிப்பித்தது. இதன் விலை: அணா 8. தபாற்கூலி வேறு.]

இந்நூலியற்றினர் சென்னைச் சுதேசமித்திரன் பத்திரிகையின் உதவிப் பத்திராதிபராகிய ம-ள-ள-ஸ்ரீ மு. அ. **சங்கரலிங்கம் பிள்ளையவர்கள் பி. ஏ.** பதினைந்து பதினாறும் காங்கிரெஸ் மகாசபைக் கூட்டங்களில் நிகழ்ந்த விஷயங்கள் யாவற்றையும் ஒருங்குதிரட்டிக் கூறுமுகத்தாற் பற்பல அரிய விஷயங்களை எடுத்துக்கூறுவது; ஏறக்குறைய 144 பக்கங்கள் கொண்டது. நூலாசிரியரது முகவுரையும், இந்தியாவினது ஆதி சரித்திரம் காங்கிரெஸ் மகாசபையினது வரலாறுகளடங்கிய நான்முகமும் இந்தியக் காங்கிரெஸ் மகாசபை காங்கிரெஸ் பிரசித்தப்பத்திரிகை யென்னும் உபோற்காதமும், காங்கிரெஸ் மகா சபைக்கூட்டங்களின் அட்டவணையும், அவற்றில் தீர்மானிக்கப்பட்ட விஷயங்களின் அட்டவணையும், முடிவுரைக் குறிப்புமெனக் கூறப்பட்ட விஷயங்கள் யாவும் இந்நூலிற்கு இன்றியமையாத அங்கங்களே. நல்ல பளபளப்புள்ள கடிதத்திற் பெரிய எழுத்துக்களில் நன்கு பதிப்பிக்கப்பட்டுளது. சுதேசாபிமானிகளாகிய நம்மவரனைவரும் இப்புத்தகத்தை விலைக்குப் பெற்று நூலாசிரியரை ஊக்குவாரென நம்புகின்றோம். இந்நூல் யாவருக்கும் பொருள் விளங்கத்தக்க இனிமையும் தெளிவும் வாய்ந்த தமிழ் நடையிலெழுதப்பட்டிருப்பது இதனைச் சிறப்பிக்கும் அம்சங்களுளொன்றும்.

ஸமரஸ ஞான சந்திரிகை :

[இது சென்னை மினெர்வா அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது; இதன் விலை ரூ. 1—0—0; தபாற்கூலி வேறு.]

இந்நூல் சமயப் பொறுமை வளர்ப்பான் வெளிப் போந்ததோர் வைதிக தத்வஞான நூல்; இது 86-பக்கங்கள் கொண்டது; இராஜா ஸர்

ஸவலை இராமசாமிமுதலியார் அவர்களுக்கு உரிமை பூண்டுள்ளது; ம-ா-ா-ஸ்ரீ தண்டலம் - பாலசுந்தர முதலியாரவர்களால் முகவுரை யெழுதப் பெற்றது; நூலாரம்பத்திற் பரசிவ வணக்கமும் சற்குரு வணக்கமும் கொண்டுள்ளது. இதனை இயற்றியவர் ஸ்ரீமான் விச்சூர் - முத்துக்குமார சுவாமி முதலியாரவர்கள், பி. ஏ. நம்மிந்தியா தேசத்திலே தொன்று தொட்டு விளங்கும் மதங்கள் பற்பலவாம். இந்த மதங்களில் இற்றை ஞான்று உலவாநிற்கும் மதவாதிகளிற் பெரும் பான்மையோர் தமது மதத்தைப் போற்றுவதும் ஏனைய மதங்களைத் தூற்றுவதுமே நாம் யாவரும் அனுதினமுங் கண்கூடாகக் கண்டுவரும் விஷயங்களாயிருக்கின் றன. ஒரு தேசம் உயர்நிலை யெய்தவேண்டுமானால், அத்தேசத்திலுள்ள பற்பல மதஸ்தர்களும் தத்தம் மதச்சண்டைகளை யொழித்து யாவரும் ஒற் றுமை யுடையராதல் வேண்டும்; அவ்வாறன்றி ஒவ்வொருவரும் மதச்சண் டையில் தலையிட்டுப் பிறமத தூஷணஞ்செய்து உள்ள ஒற்றுமையையுங்கெ டுப்பார்களானால், அந்தத்தேசம் நாளுக்குநாட் குறைந்துபடுமேயன்றி ஒரு நாளும் உயர்ந்தோங்காது. ஐக்கியபலத்தை அதிகரிக்க வேண்டுமென்ப தன்றோ காங்கிரெஸ் மகாசபையின் கருத்துமாகும்? இவையிற்றை உண ராது, மதத்வேஷிகளாய்த் திரியும் நம்மவர்க்கு மதி புகட்டவேண்டுமென் றும், அங்ஙனம் செய்வதில், சந்திரனானவன் சான்றோனென்றும், சண்டாள னென்றும் வேற்றுமை பாராட்டாது யாவர்க்குந் தனது வெளிச்சத்தைத் தந்து பயன்படுமாறு, தமது 'ஞானசந்திரிகை'யும், இந்து வென்றும், பௌத்தனென்றும், மகம்மதியனென்றும், கிறிஸ்தவனென்றும், வேற்றுமை பாராட்டாது யாவர்க்கும் ஒருங்கே பயன்படவேண்டுமென்றும், இந்நூலா சிரியர் கருதினார்போலும். அற்றாயின், இவருடைய கருத்து யாவர்க்கும் ஒப்ப முடிந்ததே யென்பதில் யாதோர் ஐயப்பாடுமில்லை. அன்றியும் சந்திர னிடத்துக் களங்கங் காணப்படுதல்போல இந்நூலின்கட் சில குறைகளுங் காணப்படலாம்; எனினும் கடவுள் ஒருவரே யென்பதும், உலகிலுள்ள பற் பல மதஸ்தர்கள தேடுவதும் நாடுவதும் அக்கடவுள் ஒருவரையே யென்ப தும், துவைதி அத்வைதி விசிஷ்டாத்வைதியாகிய இனையோர் யாவர்க்கும உள்ளபொருள் ஒன்றென்பதைத் துணிவதே ஸமரஸஞானமென்பதும், அந்த ஞானத்தை உலகோர்க்கு வலியுறுத்துக் கூறுமாறு வெளிப்போந்ததே 'ஸம ரஸஞான சந்திரிகை'யா மிந்நூல் என்பதும், இதனைப் படிப்போர் ஒவ் வொருவர் மனத்தும் வலியுறுத்தாமற்போகா. மதவாதிகளும் மதச்சண் டைகளும் அதிகரித்து அவரவர்கள் தங்கள் தங்கள் கல்வியையும் காலத் தையும் வீணிற்போக்கும் இக்காலத்து இத்தகைய நூல் வெளிப்போந்தது நேரிதே. ஒவ்வொரு மதத்திலுள்ள குற்றங் குறைபாடுகளை யெடுத்துக்காட்டி அதனால் அந்தந்த மதத்தினரை மனநோவச் செய்யவேண்டுமென்பது இந் நூலின் கருத்தன்று. அன்றியும், இந்நூலாசிரியர் யாவரையும் பொது வாய்ப் புகழ்ந்துபேசும் பெற்றியரென்பது, இந்நூலை உற்று நோக்குவார்க் குத் தெற்றென விளங்கும். சிற்சில விடங்களில் வேண்டாகூறலென ஒதுக் கற்பாலனவுமுள. நூலின் நடை மிகவும் செவ்வி வாய்ந்துள்ளது; இனிய நடையின் இயன்றுள்ளமையின், ஆடவர்மகளிர் யாவர்க்கும் பயன்படத் தக்கது. மதவாதிகளேயன்றி ஏனையோரும் இந்நூலை வாங்கிப்படித்து ஆனந்திப்பார்களென நம்புகின்றோம். நம்முடைய முதலியார் சர்வமத சம்மதமான நூல்கள் பலவெழுதி காட்டி யாவரையும் ஒற்றுமைப் படுத்தி யொளிர்வாராக.

---

# EDITORIAL NOTES.

## பத்திராதிபர் குறிப்புக்கள்.

**தமிழில் எம். ஏ. பட்டம் பெற்றவர் :**—சென்ற ஜனவரிமீ நிகழ்ந்த எம். ஏ. பரீக்ஷையில் தமிழை முதற்பாஷையாகவும் கன்னடத்தை இரண்டாம்பாஷையாகவும் கொண்டுசென்று தேறினார் ஒருவர். அவர் திரிசிரபுரத்திலுள்ள எஸ். பி. ஜி. கலாசாலையின்கண் வெகுநாட் சரித்திரப்புலமை நடாத்தினவரும் இப்பொழுது சரித்திரப்புலமையும் வடநூற் புலமையும் தமிழ்நூற்புலமையும் ஒருங்கே நிகழ்த்துபவருமாகிய ம-ா-ா-ஸ்ரீ **பி. துரைராய ரவர்களாவார்.** மேற்கூறியாங்கு மூவகைப் புலமை படைத்த இவர் நந் தமிழின்கண்ணே பல்லாற்றானும் உழைத்துப் பலரையு மின்புறுத்துவாராக.

**எம். ஏ. பட்டம்பெற்ற பெண்பாலார்:**—சென்ற வருடத்தில் நிகழ்ந்த எம். ஏ. பரீக்ஷையில் இராஜதானிக் கலாசாலைத் தத்துவப்புலமை நடாத்தும் சத்தியநாதனவர்களது மனைவியார் ஆங்கிலமொழியில் தேறி எம். ஏ. பட்டம்பெற்றதுபோல் இவ்வாண்டு நிகழ்ந்த எம். ஏ. பரீட்சையில் ஆங்கில மொழியில் அன்னாரது இளைய சகோதரியாராகிய **கிருஷ்ணம்மா வவர்கள்** தேறிப் பட்டம் பெற்றார்கள். இவ்வாறு நம்முடைய இந்து மகளிரும் பி. ஏ. எம். ஏ. முதலிய பரீட்சைகட்குப் படித்துப் பட்டம்பெறுதல் எந்தநாளோ! நம்மவர் பெண்கல்வியைப்பற்றி வீண் முழக்கஞ் செய்வார்களேயன்றி விஷயத்தை உடனே மேற்கொண்டு செய்யப் புகுவார்களல்லர். அதற்கு நாமென்ன செய்யலாம் ?

**சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைப் பரிசிற் கொடை நாள் :**—வருகிற எப்ரல் மாதம் 4-தேதி வெள்ளிக்கிழமையன்று மாலை நான்குமணிக்குமேல் சென்னைக் கிறிஸ்தவ கலாசாலை மாணாக்கர்கட்குப் பரிசில் கொடுக்கப்படும். அவ்வமயத்து நமது சென்னையிராஜதானித் தேசாதிபதி யவர்களாகிய **ஆண்ட்ஹில் சீமானவர்கள்** சபாநாயகராக வீற்றிருக்கக் கருணை கூர்ந்தார்கள். இவ்வாறு பரிசில் கொடுத்தால் மாணாக்கர்களுக்கு மிக்க ஊக்கம் விளையும் என்றற்கண் யாதோர் ஐயப்பாடுமில்லை.

**எம் டி. பட்டம்பெற்றவர் :**—மதுரைமாநகரத்திற் பிறந்து சென்னை மாநகரின்கண்ணே வைத்தியத்தொழில் பூண்டு பலர்க்கும் உபகாரஞ்செய்து வரும் **எம். கிருஷ்ணஸ்வாமி** ஐயரவர்களும் மைசூரில் வைத்தியத்தொழில் செய்துவரும் **இராமசுவாமி ஐயங்காரவர்களும** இவ்வருஷத்தில் எம். டி. பட்டம்பெற்றதற்காக மிகவும் சந்தோஷப்படுகின்றோம்.

**நிலவரி வரும்படி :**—நமது சென்னையிராஜதானியில் சென்ற வருஷத்து நிலவரி வரும்படி 960 லக்ஷமேயாக, இவ்வருஷத்து நிலவரி வரும்படியோ 997 லக்ஷமாம். எனவே நமது சென்னையிராஜதானி நிலவரி வரும்படியில் 37 லக்ஷம் அதிகமாயிருக்கின்றது.

**கன்னியாகுமரி :**—நம்மிந்தியா தேசத்தின் தென்கோடியும் மிகப்பெரியதோர் க்ஷேத்திரமுமாக மதிக்கப்படும் கன்னியாகுமரி முனைக்கண் புதியதோர் துறைமுகம் வகுத்து அதனைக் கப்பல்கள் செல்லும் பெரியபாதையோடு சேர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவென்றும் ஐரோப்பிய சுதேசவியாபாரிகளிற் பலர் அவ்விடத்தில் வாணிபங் கருதிமிக்க நிலம்வாங்கி யிருக்கின்றனரென்றும் கேள்விப்பட்டு மகிழ்கின்றோம்.

# Specimens of RUBBER STAMPS

MANUFACTURED BY THOMPSON & CO.,

*The City Rubber Stamp Makers, Broadway, Madras.*



No. 313—Rs. 2-8-0.




No. 303—Rs. 2-8-0.




No. 314—Rs. 2-8-0.




No. 309—Rs. 2-0-0.




No. 300—Rs. 3-0-0.




No. 304—Rs. 3-8-0.




No. 302—Rs. 2-0-0.



No. 306—Rs. 3-0-0.



Rs. 3-0-0.